வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    24.03.2025 திங்கட்கிழமை    இதழ் : 85    பக்கங்கள் : 12

# தையிட்டி விகாரை வளாகத்தில் வேறொரு சட்டவிரோத கட்டடம்!

## எதிர்த்து மக்கள் போராட்டம்





யாழ்ப்பாணம், மார்ச் 24

**தையிட்டியில் மக்களின் காணிக்குள் சட்ட விரோதமாக கட்டப்பட்டது என்று கூறப்படும் திஸ்ஸ விகாரை அமைந்துள்ள வளாகத்துக்குள் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடம் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து காணி உரிமையாளர்களும் அப்பகுதி மக்களும் அரசியல் தரப்பினரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

இந்தக் கட்டடத்தையும் இராணுவத்தினரே அமைத்து நேற்றைய தினம் விகாராதிபதியிடம் ஒப்படைத்தனர். அத்துடன், திறப்பு விழா ஏற்பாடுகளிலும் சிங்கள மக்களை அழைத்து வரும் பணிகளிலும் இராணுவம் ஈடுபட்டதுடன், இதற்கு இராணுவ வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன என்றும் அறிய வருகின்றது.

அச்சுறுத்திய பொலிஸ்

புதிய கட்டடத் திறப்பு விழாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து காணிகளின் உரிமையாளர்கள் அப்பகுதி மக்கள்

11

## பௌத்த விரிவாக்கலை அநுர முன்னெடுக்கிறார்!

### கஜேந்திரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 24

அநுர குமார திஸநாயக்க ஒருபுறத்திலே தான் இனவாதம், மதவாதத்துக்கு இடமளிக்க மாட்டேன் என்று சொல்லிக்கொண்டு தமிழர் தேசத்தில் மேலும்மேலும் பௌத்த விரிவாக்கல் நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார் - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தையிட்டி திஸ்ஸ விகாரை வளாகத்துக்குள் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் மற் றொரு கட்டடம் நேற்று ஞாயிற்றுக்கிழமை

11

## தீர்வு தருவதாகக் கூறிவிட்டு திறப்பு விழா நடத்துகின்றனர்!

### காணி உரிமையாளர்கள் சாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 24

அநுர அரசாங்கத்தின் அமைச்சர் எங்களை கொழும்புக்கு அழைத்து பேச்சு நடத்தி விரைவில் தீர்வு தருவதாகக் கூறிய அதே சந்தர்ப்பத்தில் தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டுள்ள வளாகத்துக்குள் புதிய கட்டடத் திறப்பு விழா நடைபெறுகிறது. இது வேதனைக்குரிய விடயம் - இவ்வாறு கூறியுள்ளார் தையிட்டி திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளில்

11

ஜி. எஸ். பி. பிளஸ் வரி சலுகை;

## ஐரோப்பிய கண்காணிப்பு குழு ஏப்ரலில் இலங்கை வருகிறது!

கொழும்பு, மார்ச் 24

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி. எஸ். பி. பிளஸ் வரி கண்காணிப்பு குழு எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் ஒரு வார காலம் இலங்கையில் தங்கியிருக்கும் இந்த கண்காணிப்புக் குழு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர் தரப்பினரை சந்தித்து கலந்துரையாடவுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் நிகழ்நிலை

11

## ஜி. எஸ். பி. சலுகையை இழந்தால் 123 கோடி டொலர் இழப்பு ஏற்படும்!

கொழும்பு, மார்ச் 24

ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகையை இலங்கை இழந்தால் 123 கோடி அமெரிக்க டொலர்கள் இழப்பை சந்திக்க நேரிடும் என்று கொள்கை ஆய்வுகள் நிறுவனம் (ஐ. பி. எஸ்) சுட்டிக் காட்டியுள்ளது.

தொழில்நுட்ப தயாரிப்புகள், தைத்த ஆடைகள் துறைகள் வீழ்ச்சியை சந்திக்கும். இலங்கை ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகையை இழப்பது பொருளாதார நெருக்கடி இன்னமும் தீராத நிலையில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

## யாழ். நகரில் ஹெரோயினுடன் இருவர் கைது!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் போதைப் பொருள் தடுப்பு பிரி வினர் இவர்களைக் கைது

11

## மன்னார், பூநகரி சபைகளுக்கான வேட்புமனு தாக்கல் இன்று ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 24

மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டி பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் எதிர்வரும் வியாழக்கிழமை நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

உள்ளூராட்சி தேர்தல் எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில், 336

11

## காய்ச்சலால் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஐந்து நாட்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உயிரிழந்தார்.

கிளிநொச்சி - தருமபுரம் - உழவனூர் பகுதியை சேர்ந்த நடராசா இன்பராசா (வயது 56) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

இதுகுறித்து மேலும் அறிய வருபவை

11



## பாப்பரசர் பிரான்சிஸ் மக்களுக்கு ஆசீர்வாதம்

ரோம், மார்ச் 24

பாப்பரசர் பிரான்சிஸ் நேற்றைய தினம் சிகிச்சை நிறைவடைந்து மருத்துவமனையிலிருந்து வெளியேறினார். அவர் மருத்துவமனையிலிருந்து தனது இல்லத்துக்கு திரும்புவதற்கு முன்னர் பொதுவெளியில் தோன்றி மக்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினார்.

88 வயதான பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி சுவாச தொற்று காரணமாக இத்தாலியின் ரோமிலுள்ள ஜெமெல்லி மருத்துவமனையில்

11

## வாக்குச்சீட்டு அச்சிடும் பணி ஆரம்பமானது

கொழும்பு, மார்ச் 24

உள்ளூராட்சி தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பணி ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்தது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன்படி, 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான

11

## தேர்தலை பாதுகாப்பாக நடத்துவதில் அரசு உறுதி

### உள்ளூராட்சி பிரதி அமைச்சர்

கொழும்பு, மார்ச் 24

உள்ளூராட்சித் தேர்தலை சுமுகமாகவும் பாதுகாப்பாகவும் நடத்துவதற்கு எமது அரசாங்கம் உறுதி பூண்டிருக்கிறது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் ருவான் செனரத் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்திய அவர்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் நேற்றும் 85 கிலோ கஞ்சா சிக்கியது



வடமராட்சி, மார்ச் 24
வடமராட்சி கிழக்கு - ஆழியவளையில் நேற்றைய தினமும் 85 கிலோ கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இராணுவ புலனாய்வு பிரிவி னருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மருதங்கேணி பொலிஸாருடன் பொலிஸ ாரும் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பிலேயே இந்தக் கஞ்சா கைப்பற்றப்பட் டது.

40 பொதிகளாக பொதியி டப்பட்ட 85 கிலோவுக்கும் அதிகமான கஞ்சா நேற்று அதிகாலை கைப்பற்றப்பட் டன.

கைப்பற்றப்பட்ட கஞ்சா வின் சந்தைப் பெறுமதி சுமார் ஒரு கோடியே 70 இலட்சம் ரூபாய் என்று கருதப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் பருத்தித்துறை - தும்பளை கடற்கரையில் 300 கிலோவுக்கும் அதிகமான கஞ்சா கைப்பற்றப்பட்டமை யும் குறிப்பிடத்தக்கது. (ஐ-05)

## அனுமதிப்பத்திரமின்றி மணல் விற்றவர் கைது!

கிளிநொச்சி, மார்ச் 24
கிளிநொச்சியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் விற்பனை நிலையம் அமைத்து வியாபா ரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட் டில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவில் உழவனூர் பகுதியில் அனுமதிப்பத்திர மின்றி மணல் விற்பனை செய்த வரே இவ்வாறு கைது செய்யப் பட்டார்.

இதேநேரம், கல்லாறு பகுதி யில் பொது இடத்தில் மணல் சேகரித்து வைக்கப்பட்டிருந்த அங்கிருந்த 28 கியூப் மணல் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது. அத்துடன், அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றும் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டதுடன், அதன் சாரதி யும் கைது செய்யப்பட்டார்.

## போதைப்பொருட்களுடன் மூவர் கிளிநொச்சியில் கைது!


கிளிநொச்சி, மார்ச் 24
வீடொன்றில் ஹெரோயின், ஐஸ் போதைப் பொருட்களு டன் மூன்று பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி - பரந்தன் - குமரபுரம் பகுதியிலேயே இவர் கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடமிருந்து 20.7 கிராம் ஐஸ் போதைப் பொருள், 5 கிராம் 75 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற் றப்பட்டன.

அத்துடன், மோட்டார் சைக்கிள் ஒன்றும் 4 கைபேசி களும் கைப்பற்றப்பட்டன என்றும் கிளிநொச்சி பொலி ஸார் தெரிவித்தனர். (ஐ)

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு மதிப்பு



வடமராட்சி, மார்ச் 24
புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்தி பெற்ற மாணவர்கள் நேற்றைய தினம் கௌரவிக்கப் பட்டனர்

வடமராட்சி கிழக்கு செம்பி யன்பற்று வடக்கு பிரதேசத்தை சேர்ந்த மாணவர்களே இவ் வாறு கௌரவிக்கப்பட்டனர். நேற்று ஞாயிற்றுக்கிழமை சென். பிலிப் நேரிஸ் ஆலய வாராந்த திருப்பலியின்போதே இவர்கள் கௌரவிக்கப்பட் டனர்.

செம்பியன்பற்று கடற் றொழிலாளர் சங்கத்தின் நிதி அனுசரணையில் ஆலய அருட் சகோதரியால் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-05)

## வவுனியா சிறையில் இருந்து கைதி ஒருவர் தப்பியோட்டம்

வவுனியா, மார்ச் 24
வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் நேற்று தப்பி ஓடி யுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் இடம்பெற்ற திருட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப் பட்டு நீதிமன்றத்தில் முற்படுத் தப்பட்ட நிலையில் குறித்த நபர் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தார்.

அந்தக் கைதியே சிறையிலி ருந்து தப்பிச் சென்றுள்ளார். சந்தேக நபரை கைது செய்வதற் கான நடவடிக்கைகளை வவு னியா சிறைச்சாலை அதிகாரி கள் மற்றும் வவுனியா பொலி ஸார் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## விபத்தை ஏற்படுத்திய சாரதிக்கு விளக்கமறியல்

மன்னார், மார்ச் 24
மன்னார் - பெரிமடுவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துடன் தொடர்புடைய வாகனத்தின் சாரதி விளக்க மறியலில் வைக்கப்பட்டுள் ளார்.

மன்னாரில் நேற்றுமுன் தினம் அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்தனர். வேகக் கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் லொறியை மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது. டிப்பர் சாரதி மதுபானம் அருந் தியிருந்தமை விசாரணையில் தெரிய வந்தது.

இதையடுத்து, கைது செய் யப்பட்ட சாரதி மன்னார் நீதி வானின் உத்தரவில் எதிர்வரும் 27ஆம் திகதி வரை மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)



## பசு மாடுகளை அனுமதியின்றி கொண்டுசென்ற இருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 24
அனுமதிப்பத்திரமின்றி 8 பசு மாடுகளை சித்திரவதைக்கு உள்ளாக்கும் வகையில் வாகனத் தில் ஏற்றிச் சென்ற இருவரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த பசு மாடுகள் கொடிகா மத்திலிருந்து வவுனியாவுக்குக் கொண்டு செல்லும் நோக்கில் வாகனத்தில் ஏற்றிச் செல்லப் பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொடிகாமம் நகரில் வைத்து சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த வாக னத்தை பொலிஸார் சோதனை யிட்டபோதே இந்த பசு மாடு கள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட இரு வரையும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலி ஸார் நடவடிக்கை எடுத்துள் ளனர். (ஐ)

## திருட்டில் ஈடுபட்ட முன்னாள் சிப்பாய் உட்பட ஐவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 24
யாழ்ப்பாணத்தில் உள்ள தொலைத்தொடர்பு கோபுரங் களில் மின்கலங்களை தொடர்ச் சியாக திருடி வந்த குற்றச்சாட் டில் முன்னாள் கடற்படை சிப்பாய் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள தொலைத்தொடர்பு வலையமைப்புகளின் கோபுரங் களுக்கு பொருத்தப்பட்டிருந்த மின்கலங்கள் தொடர்ச்சியாக களவாடப்பட்டு வந்துள்ளன. இது தொடர்பில், கோபுரங்கள் அமைந்துள்ள பகுதிகளின் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட் டன.

இந்த முறைப்பாடுகளின் பிரகாரம் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலை மையிலான குழுவினர் விசார ணைகளை முன்னெடுத்தனர். இதன்படி, அவர்களுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அம்பாறையில் பதுங்கியிருந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கோப்பாய் பொலிஸ் நிலை யத்துக்கு அழைத்து வரப்பட்ட வர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் திருட்டுகளில் ஈடுபட்டு வந்தவர்களில் ஒருவர் முன்னாள் கடற்படை சிப்பாய் என்று அறிய வந்துள்ளது. மற் றொருவர், அந்த மின்கலங் களை கொள்வனவு செய்தவர் என்றும் ஏனைய மூவரும் திருட்டுக்கு உடந்தையாக இருந்தவர்கள் என்றும் தெரிய வந்தது.

இவர்கள், யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 192 மின் கலங்களை களவாடியுள்ளனர் என்றும் மின்கலம் ஒன்றின் பெறுமதி சுமார் ஒரு இலட்சம் ரூபாய்க் கும் அதிகம் என்றும் பொலி ஸார் தெரிவித்தனர். (ஐ)

**தேசிய வெளிக்கள நிலையம், தொண்டைமானாறு**

**சமூக ஊடகங்கள், பாடசாலைகள் கல்விச் சமூகத்தினருக்கான அறிவித்தல்**

**திரு.ப.கஜேந்திரன்** என்பவர் மேற்கொண்ட மோசடிகள் காரணமாக 21.04.2024இல் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி இந்நிலையத்தின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். இவர் ஊடகங்களில் தான் தேசிய வெளிக்கள நிலையத்தின் அதிகாரம் மிக்க செயற்குழு உறுப்பினர் எனவும் செயல்திட்டப் பணிப்பாளர் எனவும் போலியாக விளம்பரம் செய்வதுடன பாடசாலை விழாக்களிலும் இப்பதவியுடன் விருந்தினராகவும் கலந்து வருகின்றார். **திட்டப்பணிப்பாளர்** என்ற பதவி நிலையத்தில் இல்லாத பதவி என்பது குறிப்பிடத்தக்கது. நிலையம் சார்பாக இவரது தொடர்புகளுக்கு தேசிய வெளிக்கள நிலையம் பொறுப்பெற்காது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்

**A. கதிர்காமநாதன்,**
செயலாளர்,
தேசிய வெளிக்கள நிலையம்.

(இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
24.03.2025 திங்கட்கிழமை
பிலவ வருடம், பங்குனி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# சீர்திருத்தம்

அரசாங்கம் பல அரச கட்டமைப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து வருகிறது. இதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழு பல பரிந்துரைகளை முன்வைத்திருக்கிறது. இந்த அடிப்படையில் செயல்திறனற்ற திணைக்களங்கள் சிலவற்றை கலைப்பதற்கும் குறித்த குழு பரிந்துரைத்திருக்கிறது. இது நல்ல விடயம். ஆனால், இதனுடன் சேர்த்து மாகாண சபையின் வினைத்திறனான செயல்பாட்டுக்கான கட்டமைப்பு மாற்றங்கள் தொடர்பிலும் அரசாங்கம் சிந்திக்க வேண்டும் - ஒருவேளை மாகாண சபையையே இல்லாமலாக்கிவிடலாம் என்று எண்ணினால் அது வேறு விடயம்.

மாகாண சபையின் கீழிருந்த பல விடயங்கள் மத்திய அரசின் கீழ் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. உண்மையில், ஒரு நாட்டின் பொருளாதார மற்றும் சமுதாய மேம்பாட்டுக்கு முக்கியம் விடயங்களை பரவல்படுத்துவதாகும். மாறாக, ஓர் இடத்தை நோக்கிக் குவிப்பதல்ல. இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் இந்தத் தவறை தொடர்ந்தும் செய்தன. இதன் காரணமாகவே நாடு அதலபாதாளத்தை நோக்கிச் சென்றது.

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அமெரிக்க மத்திய அரசின் கட்டுப்பாட்டிலிருந்த கல்வித் திணைக்களத்தை கலைப்பதற்கான நிறைவேற்று உத்தரவை பிறப்பித்திருந்தார். அந்தத் திணைக்களத்தை மாகாண அரசாங்கங்களே மேற்கொள்ளும் என்று ட்ரம்ப் அறிவித்தார். இவ்வாறான வாக்குறுதியை அவர் தேர்தல் பிரசாரத்தின்போது குறிப்பிட்டிருந்தார். அதனை தற்போது செய்திருக்கிறார். இந்தியாவிலும் பல்வேறு விடயங்கள் மாநிலத்திடம்தான் இருக்கின்றன. அப்போதுதான் நிர்வாகத்தைத் திறம்பட மேற்கொள்ள முடியும்.

ஆனால், இலங்கையில் நடந்ததோ வேறு. அதாவது, மாகாணத்தின் கீழிருந்த கல்வியை மத்தியின் கீழ் கொண்டு சென்றனர். உதாரணமாக மாகாண சபைகளுக்கு கீழுள்ள பாடசாலைகளை தேசிய பாடசாலை என்னும் பெயரில் மத்தியின் கீழ் கொண்டு செல்லப்பட்டது. பாடசாலைகளில் தேசிய பாடசாலை என்னும் பிரிவு அவசியமற்ற ஒன்று. தேசிய பாடசாலை என்பது கல்விக்கு சிறந்தது மற்றைய பாடசாலைகள் தரமற்றவை என்னும் எண்ணம் மக்களுக்குள் புகுவதற்கே அது வழிவகுத்தது. இந்த விடயம் கலைக்கப்பட வேண்டும்.

இதேபோன்று, கிராம சேவகர்கள் மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் அல்லது பிரதேச செயலகங்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். அதேபோன்று, மாகாண எல்லைக்குள் அடங்கும் விடயங்களை மாகாண சபையால் கையாளக்கூடியவாறான நிர்வாக சீர்திருத்தங்கள் அவசியம். இதேபோன்று, முதலீடுகளை மாகாண சபையின் எல்லைக்குள் கையாளக்கூடிய நிர்வாக மாற்றங்கள் அவசியம். அப்போதுதான் புலம்பெயர் முதலீடுகளை ஈர்க்கமுடியும். இவ்வாறான மாற்றங்கள் தொடர்பில் அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

# அதிக ஆசனங்களை பெறுவதே நோக்கமாக இருக்க வேண்டும்

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மார்ச்.24

உள்ளூராட்சி சபைத் தேர்தலில், ஒவ்வொரு சபைகளிலும் அதிகளவான ஆசனங்களை பெற்றுக் கொள்வதாகவே எமது முயற்சிகள் இருக்க வேண் டும் என்று ஈழ மக்கள் ஜன நாயக கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா அறி வுறுத்தியுள்ளார்.

காலச் சூழலுக்கு ஏற்ப அரசியல் களமும் அதற்கான முடிவுகளும் இருப்பதும் அவசியம் என்றும் அவர் கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஈ.பி.டி.பியின் வெற்றிக்கான பொறிமுறைகள் குறித்து யாழ்ப்பாணத்திலுள்ள அந்தக் கட்சியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பாளர்களுள் ஒரு பகுதியினர், கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது டக்ளஸ் மேலும் கூறுகையில்,

"கடந்த எமது ஆட்சியில் வாயை வயிற்றைக் கட்டி சேமித்த பணத்தையே தற்போதைய ஆட்சியாளர்கள் தங்களின் பொருளாதார மீட்சியாக காட்சிப்படுத்துகின்றனர். கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்ற முடியாத ஆட்சியாளர்கள் மேலும் புழுகு மூடைகளுடன் உள்ளூராட்சித் தேர்தலுக்குத் தயாராகி வருகின்றனர்.

மேலும், உண்மையான தமிழ்த் தேசியத்தை பாதுகாக்கும் யதார்த்தமான தரப்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியே செயல்பட்டு வருகிறது.

தற்போது கடந்த காலங்களைப் போலல்லாது அரசியல் தளம் மாற்றமடைந்துள்ளது.

இது தமிழ்த் தரப்பினரின் அரசியல் களத்தில் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய சூழலையும் உருவாகியுள்ளது" - என்றார்.

(எ-05)

# தமிழகத்திலுள்ள ஈழ அகதிகள் வடக்கு மாகாணத்தின் சொத்து

யாழ்ப்பாணம், மார்ச் 24

தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளில் பலர் தாதியர் கற்கை நெறியை முடித்தவர்கள் எனவும், விளையாட்டுத் துறையில் சாதித்தவர்கள் எனவும் ஒபர் சிலோன் நிறுவனத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர். இதேவேளை, வடக்கு மாகாணத்தின் சொத்தான அவர்களை இழக்கக் கூடாது எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவருவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தச் செயல்பாடுகளை முன்னெடுத்துவரும் ஒபர் சிலோன் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக குறித்த கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இதன்போதே குறித்த நிறுவனத்தினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

இதேவேளை, தமிழகத்திலிருப்பவர்களை வலுக்கட்டாயமாக நாட்டுக்கு அழைத்துவர முடியாது எனக் குறிப்பிட்ட ஆளுநர், வரவுள்ளவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கத் திட்டமிடுமாறும் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் ஒபர் சிலோன் நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர்கள், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், மேலதிக மாவட்டச் செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், சமுர்த்திப் பணிப்பாளர்கள், மாவட்டப் பதிவாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(எ- 05)

# போலி ஆவணங்கள் மூலம் சொகுசு கார்கள் இறக்குமதி

கொழும்பு, மார்ச் 24

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி சொகுசு கார்கள் உட்பட ஆயிரக்கணக்கான வாகனங்கள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று கோபா குழுவின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

டிராக்டர் இறக்குமதி செய்வதாகத் தெரிவித்து சொகுசு கார்களை இறக்குமதி செய்துள்ளமை தெரிய வந்துள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கோபா குழுவின் முன்பு அழைக்கப்பட்டபோதே இந்த உண்மைகள் தெரிய வந்தன.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனி - 24 திங்கட்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 10
நல்ல நேரம்: 6.00 - 7.30
ராகு காலம்: 7.30 - 9.00
திதி: தசமி




**மேடம்**
இதுவரை இருந்த அலைச்சல் நீங்கி குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். மாற்றம் ஏற்படும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடிவடையும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**சிம்மம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். அனாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு.

**கன்னி**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். நல்ல செய்தி வரும். நல்லன நடக்கும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். மன இறுக்கங்கள் உருவாகும். அதிக வேலைச்சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள்.

**மகரம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். மதிப்புக் கூடும் நாள்.

**மீனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

# இந்தியாவிலுள்ள ஈழ அகதிகள் இலங்கைக்கு திரும்பவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.24

இந்தியாவில் உள்ள ஈழ அகதிகள் இலங்கைக்கு திரும்ப வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அவ்வாறு நாடு திரும்புபவர்களுக்கான உதவிகளை வழங்குவதுடன், ஈழ அகதிகள் நாடு திரும்புவது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்கள் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை உருவாக்குவதற்கும் உரிய தரப்புக்களிடம் கோரிக்கை முன்வைக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவருவது தொடர்பில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தச் செயல்பாடுகளை முன்னெடுத்துவரும் ஒபர் சிலோன் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக குறித்த கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அழைத்துவரவேண்டும் என போர் முடிந்ததிலிருந்து சொல்லப்பட்டு வருகின்றது என்பதையும், அவர்கள் மீண்டும் இங்கு வர வேண்டும் என்பதே இங்குள்ள எல்லோரது விருப்பம் என்பதையும் ஆளுநர் வெளிப்படுத்தினார்.

அத்துடன் கடந்த காலங்களில் இவ்வாறு இந்தியாவிலிருந்து வந்த ஒவ்வொருவர் தொடர்பான விவரங்களையும் பெற்று அவர்களுக்கு எத்தகைய தேவைப்பாடுகள் இன்னமும் இருக்கின்றன என்பதை அறிந்து அதனை உடனடியாக பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் ஆளுநர் வலியுறுத்தினார். இதேவேளை,

தமிழகத்தில் தங்கியுள்ளவர்கள் நாடு திரும்புவதற்கு நிலையான கட்டமைப்பு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்றும், இலங்கை - இந்திய அரசாங்கள் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை தேவை என்றும், இலங்கையில் அரசியல் உறுதிப்பாடு அவசியம் எனவும் ஒபர் சிலோன் நிறுவனத்தினர் குறிப்பிட்டனர்.

மேலும், தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளுக்கு இலங்கை மற்றும் வடக்கு மாகாணம் தொடர்பான மிகைப்படுத்தப்பட்ட அல்லது போலியான தகவல்கள் வழங்கப்படுகின்றமையும் அவர்கள் நாடு திரும்புவதற்கு சவாலாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் நாடு திரும்பிய ஈழ அகதிகள் இலங்கைக் குடியுரிமையைப் பெற்றுக் கொள்வதில் சவால்களை எதிர்கொள்கின்றனர் என்றும், நாடு திரும்புவர்கள் இங்கிருந்து சென்றவர்களின் இரண்டாம் அல்லது மூன்றாம் தலைமுறையினர் என்பதால், இலங்கையில் அவர்களது பூர்வீக பிரதேசத்தை அடையாளம் காண்பதிலும், அவர்களின் காணிகளைக் கண்டறிவதிலும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் என்ற விடயமும் ஆளுநரின் கவனத்துக்கு ஒபர் சிலோன் நிறுவனத்தால் கொண்டு வரப்பட்டது.

கொள்கை ரீதியான ஆவணம் ஒன்றை ஒபர் சிலோன் நிறுவனம் தயாரித்து வழங்கிய பின்னர் அதனை அடிப்படையாக வைத்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதாக ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

நாடு திரும்ப விருப்பமானவர்களின் பட்டியலை ஒபர் சிலோன் நிறுவனம், வடக்கின் 5 மாவட்டச் செயலர்களுக்கு வழங்கிய பின்னர் அவர்களுக்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மாவட்டச் செயலர்கள் மேற்கொள் வார்கள் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார். (எ- 05)

# நீதிமன்றத்துக்குள் யுவதியிடம் அங்கசேட்டை புரிந்தவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச்.24

மல்லாகம் நீதிமன்றத்துக்குள் யுவதியுடன் அங்க சேட்டை புரிந்தவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் பணிபுரியும் நபர் ஒருவர், நீதிமன்றத்தில் வேலை செய்யும் யுவதியுடன் தொடர்ச்சியாக அங்க சேட்டையில் ஈடுபட்டுள்ளார்.

இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத குறித்த யுவதி, இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். இந்த நிலையில், குறித்த சந்தேகநபரை நேற்று முன்தினம் விசாரணைகளுக்கு அழைத்த சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளின் பின்னர் கைது செய்தனர்.

அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# வீதியில் விபத்து ஏற்படும் அபாயம்

யாழ்ப்பாணம், மார்ச்.24

யாழ்ப்பாணம் - மருதங்கேணி, அம்பன் வீதியில் கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் வீதியில் கொட்டப்பட்ட மணல், இதுவரை அகற்றப்படாமையால் போக்குவரத்தில் ஈடுபடும் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ வாகனங்களில் செல்வோர் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம், பருத்தித்துறை பிரதேச சபை, மருதங்கேணி பொலிஸ் நிலையம் என்பனவற்றுக்கு அறிவிக்கப்பட்டும் இதுவரை எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

வீதியில் கொட்டப்பட்டுள்ள மணலின் மேலால் வாகனங்களைச் செலுத்துகின்ற போது சறுக்கல் நிலை ஏற்பட்டு விபத்துக்கள் ஏற்படக்கூடிய ஆபத்தான நிலையில் மக்கள் பயணிக்கின்றனர்.

இது தொடர் பில் உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சமூக அக்கறையுள்ள பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் செல்வோரை பொலிஸார் அல்லது விசேட அதிரடிப் படையினர் கைது செய்யும் நோக்கில் துரத்திச் செல்லும் போது அவர்கள் மணலை காப்பெற் வீதியில் கொட்டி விட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (எ-05)




வவுனியா மாவட்ட பழைய மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் "வவுனியா சங்கமம்" நிகழ்வு வவுனியா நகர சபை மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

(படங்கள்:- கோகுலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய அரசாங்கமும் தொங்கு பாலத்திலேயே பயணம்!

## இப்படி எச்சரிக்கிறது எதிர்க்கட்சி

கொழும்பு, மார்ச் 24

**“தற்போதைய அரசாங்கம் எந்த மாற்றமும் இல்லாமல் முன்னாள் ஜனாதிபதியின் அதே தொங்கு பாலத்திலேயே பயணித்துக் கொண்டிருக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

மே 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடவுள்ள களுத்துறை மாவட்ட வேட்பாளர்களை சந்தித்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி வரவு - செலவு திட்ட விவாதத்தின் இறுதிநாளில் ஆற்றிய உரையில் ஐக்கிய மக்கள் சக்தியின் முடிவெடுக்கும் முறைமை தொடர்பாகக் கருத்து தெரிவித்திருந்தார்.

அதில், நாங்கள் முடிவுகளை எடுக்க அச்சமடைவதாக அவர் குறிப்பிட்டிருந்தார். தற்போதைய அரசாங்கம் போன்று மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறாமல் மக்கள் சார்பான முடிவுகளையே ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் எடுக்கும்.


மக்களை தவறாக வழிநடத்தும் ஏமாற்று வேலைத்திட்டங்களையே தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. ஆட்சிக்கு வந்ததும் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளை மாற்றுவோம் எனக் கூறிய தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பிறகு வேறு விடயங்களை செய்து கொண்டிருக்கின்றது.



மக்களை ஏமாற்றி ஆட்சியை கைப்பற்றி, வழங்கிய வாக்குறுதிகளுக்குப் புறம்பாக வேறு கொள்கைகளை முன்னெடுப்பது வெட்கக்கேடான செயலாகும். எனவே, தற்போதைய அரசாங்கம் தமது வாக்குறுதிகளை புறந்தள்ளி, முன்னாள் ஜனாதிபதியின் கொள்கைகளையே பின்பற்றி வருகிறது - என்றும் கூறினார். (ஐ)

# எனது அரசின் கொள்கைகளை அநுரவும் பின்பற்ற வேண்டும்!

## ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, மார்ச் 24

மன்னாரில் அதானி நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்கத் தவறியமை குறித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வருத்தம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தனது அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகளைத் தொடருமாறு அரசாங்கத்திடம் கோரிக்கையும் விடுத்துள்ளார்.

இந்திய முதலீட்டாளர்கள் உட்பட இலங்கை அரசாங்கத்தால் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு திட்டத்தை தொடர்புடைய பங்குதாரர்களுடன் மீண்டும் பேச்சு நடத்த அநுர அரசாங்கம் முயற்சிப்பதன் பின்னணியில் உள்ள நியாயத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், இந்த நிலைமை எதிர்காலத்தில் பெரிய அளவிலான முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒரு தடையாக இருக்கும் என்றும் இது குறித்துதான் கவலை அடைவதாகவும் கூறியுள்ளார்.

இந்திய பெருங்கடலை மையமாகக் கொண்ட ஆசியாவை நோக்கி உலகளாவிய சக்தி மாற்றம் ஏற்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய ரணில் விக்கிரமசிங்க, இலங்கை அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - என்றும் குறிப்பிட்டார். (ஐ)

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகும் தொழிற்சங்கங்கள்!

கொழும்பு, மார்ச் 24

உதவித்தொகை, விடுமுறை கொடுப்பனவுகள், பதவி உயர்வுகள் ஆகியன குறைக்கப்பட்டமைக்கு எதிராக எதிராக தபால், ரயில்வே, சுகாதாரம் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தொழிற்சங்க தலைவர்கள் தமது துறைசார்ந்த பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்துரையாடலை தொடர்ந்தே இந்த முடிவு எட்டப்பட்டதாகத் தெரிய வருகிறது.

வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளின் மூலம் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டபோதிலும், மாதாந்த சம்பள அதிகரிப்பு குறைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில், அரசுடன் பல கட்ட பேச்சுகளை நடத்தியும் எந்த பலனும் ஏற்படாததால், எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்க சங்கங்கள் திட்டமிட்டுள்ளன. (ஐ)

# சுகாதார சேவைக்கான பௌதிக வளங்களை மேம்படுத்த உதவிகள்!

## ஐ. நா. திட்ட சேவைகள் பணிமனை வாக்குறுதி

கொழும்பு, மார்ச் 24

நாட்டின் இலவச சுகாதார சேவையின் பௌதிக வளங்களை மேம்படுத்துவதற்கு தேவையான உதவிகளைத் தொடர்ந்தும் வழங்குவதற்குத் தயாராக உள்ளதாக ஐக்கிய நாடுகளின் திட்ட சேவைகள் பணிமனை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் திட்ட சேவைகள் பணிமனையின் அதிகாரிகள் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவை சந்தித்து உரையாடினர். இதன்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் திட்ட சேவைகளுக்கான அலுவலகத்தால் நாட்டிலுள்ள 30 அரச மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படும் டிஜிற்றல் மயமாக்கல் திட்டம் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, ஆயிரம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவப்படும் - சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் ஆரம்ப சுகாதார சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பொதுமக்கள் எளிதில் அணுகக்கூடிய ஆயிரம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவப்படும் என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# அதிக விலையில் அரிசி விற்போரை கைது செய்யும் நடவடிக்கை தீவிரம்!

கொழும்பு, மார்ச் 24

பண்டிகைக்காலத்தை இலக்கு வைத்து அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களை கைது செய்வதற்கான சுற்றிவளைப்புகளை அதிகரிக்கவுள்ளதாக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பல்வேறு விலைகளில் சில போலி வர்த்தகர்களும் ஆலை உரிமையாளர்களும் அரிசி விற்பனை செய்து வருகின்றனர். அரிசியை மறைத்து வைத்துள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக அந்த அதிகார சபை தெரிவித்துள் ளது.

பச்சை அரிசி, நாட்டரிசி, சம்பா, கீரி சம்பா அரிசி ஆகியவற்றுக்காக இப்போது உச்ச பட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் கடந்த மாதங்களில் அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த 500 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சிகரெட்களுடன் பெண் கைது!

கொழும்பு, மார்ச் 24

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 35 இலட்சம் ரூபாய் பெறுமதியான சிகரெட்களுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

கைதானவர் செவனகல பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய பெண் என தெரியவந்துள்ளது. சந்தேகநபர் சுற்றுலா வீஸாவில் டுபாய் சென்று சிகரெட்களுடன் குவைத் சென்றதுடன், பின்னர் அவர் நேற்றைய தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அவரின் பையில் மறைத்து வைக்கப்பட்ட சுமார் 35 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 23 ஆயிரத்து 600 சிகரெட்கள் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டன. (ஐ)

# வீட்டுச் சாப்பாடு வேண்டும் தென்னக்கோன் கோரிக்கை!

கொழும்பு, மார்ச் 24

வீட்டிலிருந்து உணவைப் பெறுவதற்காக தேசபந்து தென்னக்கோன் முன்வைத்த கோரிக்கையை சிறைச்சாலைகள் திணைக்களம் பரிசீலித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது விளக்கமறியலில் உள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோன் தனது உணவை வீட்டிலிருந்து கொண்டு வர அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார் என்று சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பேச்சாளர் காமினி பீ. திஸநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கோரிக்கைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை சமர்ப்பிக்குமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இது தொடர்பான விடயங்களை கருத்தில் கொண்டு தென்னக்கோன் விளக்கமறியலில் இருக்கும்போது அவருக்கு வீட்டிலிருந்து உணவு வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (ஐ)

# 10 இலட்சம் குற்றவாளிகளின் கைரேகைகள் டிஜிற்றல்மயம்!

கொழும்பு, மார்ச் 24

10 இலட்சம் குற்றவாளிகளின் கைரேகைகள் டிஜிற்றல் மயமாக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீதிமன்றத்தில் தண்டனை பெற்ற நபர்களின் கைரேகைகள் டிஜிற்றல் மயமாக்கல் அமைப்பில் உள்ளிடப்பட்டுள்ளதாக பொலிஸ் குற்றப் பதிவுப் பிரிவு தெரிவித்துள்ளது.

குற்றப் பதிவுப் பதிவேடுகளை டிஜிற்றல் மயமாக்கும் திட்டம் 2013ஆம் ஆண்டில் ஆரம்பமானது. இந்தச் செயன்முறையின் மூலம் பல குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் குற்றப் பதிவுப் பிரிவு தெரிவித்துள்ளது.

முக அங்கீகாரம் மூலம் குற்றவாளிகளை அடையாளம் காணும் தொழில்நுட்ப செயன்முறையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# சருமத்தை வெண்மையாக்கும் ஊசி மருந்துகள் கைப்பற்றல்!

கொழும்பு, மார்ச் 24

சருமத்தை வெண்மையாக்க பயன்படுத்தப்படும் தரமற்ற ஊசி மருந்துகளை நுகர்வோர் அதிகார சபை கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதிகாரிகள் கொழும்பு புறக்கோட்டையில் சில வர்த்தக நிலையங்களில் நடத்திய சோதனை நடவடிக்கையிலேயே இந்த ஊசி மருந்துகள் கைப்பற்றப் பட்டன.

இது குறித்த சோதனை நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இதற்கு சுகாதார அமைச்சு ஆதரவு வழங்கியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையகப்படுத்திய சொத்துகளை அரசுடைமையாக்க சட்டமூலம்!

## ஏப். 08இல் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, மார்ச் 24

"முந்தைய அரசாங்கங்களின் காலத்தில் சட்டவிரோதமாக அல்லது முறைகேடாக கையகப்படுத்தப்பட்ட அரச சொத்துகளை அரசுடைமையாக்குவதற்கான புதிய சட்டங்களை உள்ளடக்கிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்", என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியாரச்சி தெரிவித்துள்ளார்.

குறித்த சட்டமூலம் ஏப்ரல் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த சட்டத்தின் மூலம், அரச சொத்துக்கள் மற்றும் பொது நிதியை துஷ்பிரயோகம் செய்யும் தனிநபர்களின் எந்த வொரு சொத்தும் நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் சட்ட பூர்வமாக அரசுடமையாக்கப் படும்.

"பல்வேறு காலங்களில் இந்த நாட்டை ஆண்ட ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகளுக்கு நெருக்கமானவர்கள், தந்தையர், மகன்கள், உறவினர்கள் என அனைவரும் ஒன்று கூடி நமது நாட்டின் அரச சொத்து, அரச வளங்கள் மற்றும் அரச நிதியை பல்வேறு வழிகளில் துஷ்பிரயோகம் செய்து கையகப்படுத்தியுள்ளனர்."

"மேலும் அவர்கள் அவற்றைத் தங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்டுள்ளனர். சட்டவிரோதமாகவோ அல்லது முறையற்றதாகவோ கையகப்படுத்திய எவருடைய சொத்தையும் சட்டபூர்வமாகவும் முறையாகவும் நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் மீட்டெடுக்க அரசாங்கத்துக்கு உதவும் புதிய சட்ட ஏற்பாடுகளுக்கான சட்டமூலம் ஏப்ரல் 8 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு வரவுள்ளது.

"நாங்கள் இந்த நாட்டு மக்களின் அபிலாசைகளை நாளுக்கு நாள் நிறைவேற்றி வருகிறோம் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும் இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் நம்பிக்கையையும் எந்த வித சலசலப்பும் இல்லாமல் நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்", என்றார்.

# மாணவர்களுக்கான சீருடை துணி விநியோகம் நிறைவு!

கொழும்பு, மார்ச் 24

பாடசாலை மாணவர்களுக்கு சீருடைத் துணிகளை விநியோகிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அரச மற்றும் அரச அனுமதி பெற்ற 10 ஆயிரத்து 96 பாடசாலைகளுக்கும் 822 பிரிவெனாக்களுக்கும் இந்த வருடத்துக்கான சீருடை துணிகளை விநியோகிக்கும் பணி தொடங்கியது.

ஒட்டுமொத்தமாக 46 இலட்சத்து 40 ஆயிரத்து 86 மாணவர்களுக்கு சீருடைத் துணிகள் வழங்கப்பட்டன. இதற்கு மொத்தமாக அவசியமான 12 மில்லியன் மீற்றர் துணிகள் சீன அரசின் நன்கொடையாக கிடைத்தது. தற்போது, அனைத்து பாடசாலை சீருடைத் துணிகளும் விநியோகிக் கப்பட்டு, அவை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் பணிகளும் நிறைவுசெய்யப் பட்டுள்ளன.

அரச உதவி பெறும் பாடசாலை மாணவர்களுக்கும் நாட்டின் அனைத்து அனுமதிக்கப்பட்ட பிரிவெனாக்களின் பிக்குகளான மாணவர்களுக்கும் பிக்குகள் அல்லாத மாணவர்களுக்கும் இலவசமாக பாடசாலை சீருடைத் துணி வழங்கும் செயற்பாடு 1992ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தோட்டாக்களுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு, மார்ச் 24

ரி - 56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்பட்டும் தோட்டாக்களுடன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு - பொரளை பொலிஸ் பிரிவிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், சந்தேக நபர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து ரி -56 துப்பாக்கிக்கான 7 தோட்டாக்கள், ஒரு எல். எம். ஜி. தோட்டாவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பத்தரமுல்லையை சேர்ந்த 24 வயதான இளைஞர் என தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மாத்தறை இரட்டை கொலை; சந்தேகநபர்கள் மூவர் கைது!

கொழும்பு, மார்ச் 24

மாத்தறை தேவேந்திரமுனை சிறீ விஷ்ணு ஆலயம் முன்பாக இரண்டு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.

டுபாயில் தலைமறைவாக இருக்கும் 'பலே மல்லி ' என்ற ஷெஹான் சத்சர என்ற நபர் கொலையின் பின்னணியில் உள்ளமை பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தேவேந்திரமுனையில் விடொன்றில் நடந்த பிறந்த நாள் விழாவில் பங்கேற்றுவிட்டுத் திரும்பிய 29 வயதான இளைஞர்கள் இருவர் வெள்ளிக்கிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்டனர். வானில் வந்தவர்களே இந்தக் கொலையை செய்துவிட்டு தப்பிச் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருளுடன் 14 பேர் கைதாகினர்!

கொழும்பு, மார்ச் 24

சிவனொளி பாதமலைக்கு யாத்திரை சென்ற போது போதைப் பொருட்களை கொண்டு சென்ற 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் ஹஷிஷ், கஞ்சா, கஞ்சா கலந்த மோதக மாத்திரைகள் மற்றும் புகை யிலை கலந்த மாவா ஆகிய வற்றை வைத்திருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நாட்டின் பல இடங்களை சேர்ந்த 25 - 40 வயதுக்கு இடைப்பட்டவர் களாவர். சந்தேகநபர்களை நுவ ரெலியா நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## 148,983 சுற்றுலாவிகள் 20 நாட்களில் வருகை

கொழும்பு, மார்ச் 24

இந்த மாதத்தின் முதல் 20 நாட்களில் மாத்திரம் ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 983 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்தே அதிக எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

ரஷ்யா, ஜேர்மன், இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தும் சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். இந்த ஆண்டில் இதுவரை 6 இலட்சத்து 41 ஆயிரத்து 961 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# பேஸ்புக் மூலம் களியாட்ட விழா சிறுமிகள் உட்பட 76 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 24

பேஸ்புக் களியாட்ட நிகழ்வில் கலந்து கொண்ட சிறுமிகள் உட்பட 76 நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருபவை வருமாறு,

கம்பஹாவின் சீதுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிடிகொட பெல்லவத்தை பகுதியில் ஹோட்டல் ஒன்றில் இளைஞர்கள் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேஸ்புக் களியாட்ட நிகழ்வு நேற்று முன்தினம் இரவு சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்பில் 15 பெண்கள் உட்பட 76 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து இருந்து ஐஸ், கேரள கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் மற்றும் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்களை வைத்திருந்த 3 பெண்களும் 14 ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், இந்த களியாட்ட நிகழ்வில் கலந்து கொண்ட 12 சிறுமிகளாவர்.

ஏனையவர்கள் 18 முதல் 25 வயதுக்கு இடைப் பட்டவர்களாவர்.

இது தொடர்பில் சீதுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## போதனாவியல் டிப்ளோமாதாரிகளை ஆசிரியர் சேவையில் ஈர்க்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 24

தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையில் இணைப்பதற்கான தகவல்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பாடநெறிகளைத் தொடர்ந்த பயிலுநர்களுக்கு நியமனம் வழங்குவதற்கான தகவல்கள் நிகழ்நிலை முறை மூலம் பெறப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்தது.

அதற்கமைய teacher.moe.gov.lk எனும் இணையத்தளத்தில் வழங் கப்பட்டுள்ள ஆலோசனைக ளின் பிரகாரம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விண்ணப்பங் களை சமர்ப்பிக்க முடியும். (ஐ)

## யோஷிதவுடன் சென்ற குழுவினர் விடுதி காவலாளியை தாக்கினர்!

கொழும்பு, மார்ச் 24

யோஷித ராஜபக்ஷவுடன் சென்ற சிலர் நடத்திய தாக்குதலில் கொழும்பு யூனியன் பிளேஸ் - பார்க் வீதியிலுள்ள இரவு களியாட்ட விடுதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் காயமடைந்துள்ளார்.

யோஷித ராஜபக்ஷ அவரின் மனைவியுடன் சென்ற குழுவினராலேயே நேற்றுமுன் தினம் அதிகாலை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

யோஷித ராஜபக்ஷவும் அவரின் மனைவியும் இரவு களியாட்ட விடுதி வளாகத்துக்குள் நுழைய முற்பட்ட போது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இரவு களியாட்ட விடுதிக்குள் நுழையும்போது கைகளில் அடையாளம் காண்பதற்கான பட்டியை அணியுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

இதன்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதில் குறித்த தாக்குதல் இடம் பெற்றதாக இரவு களியாட்ட விடுதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டில் தெரிவித்தனர்.

காயமடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றார். சம்பவம் தொடர்பாக கொம்பனித்தெரு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவு

கொழும்பு, மார்ச் 24

கடந்த சில நாட்களாக நுவரெலியா மாவட்டத்தில் நிலவும் வெப்பநிலை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந் துள்ளது.

விமலசுரேந்திர, கென்யோன், லக்சபான, பொல்பிட்டி, நவலக்சபான, கலுகல, காசல்ரீ, மௌசாகல, மேல் கொத்மலை ஆகிய நீர்த் தேக்கங்களிலேயே நீரின் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

மௌசாகலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை விட 25 அடிகளும், காசல்ரீ நீர்த்தேக்கம் சுமார் 20 அடிகள், கென்யோன் நீர் தேக்கம் 16 அடிகள், மேல் கொத்மலை 18 அடிகள் குறைவடைந்துள்ளன. இதே போன்று, ஏனைய நீர்த் தேக்கங்களின் நீர் மட்டமும் குறைந்துள்ளது.

இதேநிலைமை நீடித்தால் நுவரெலியா வாழ்பவர்கள்சியால் பாதிக்கும் நிலை உள்ளது என் றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவு - செலவு திட்டம் மூலமாக மக்கள் ஏமாற்றப்பட்டுவிட்டனர்!

### சிறீ லங்கா சுதந்திர கட்சி சொல்கிறது

கொழும்பு, மார்ச் 24

வாழ்க்கை செலவுக்கமைய 6 மாதங்களுக்கு ஒரு முறை அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்படும் என அன்று கூறினர்.

ஆனால், இன்று எம்மால் இவ்வளவுதான் வழங்க முடியும் என்று அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டனர்.

வரவு - செலவு திட்டத்தால் மக்கள் ஏமாற்றப் பட்டுள்ளனர் என்று சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். வரவு - செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும், மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. தேர்தல் காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்றும் வாக்குறுதிகளாகவே இருக்கின்றன. வரவு - செலவு திட்டத்திலும் அவை உள்வாங்கப் படவில்லை. மக்களின் எதிர்பார்ப்புகள் சிதறடிக்கப்பட்டுள்ளன.

வாழ்க்கை செலவுக்கமைய 6 மாதங்களுக்கு ஒருமுறை அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்படும் என அன்று கூறினர். ஆனால், இன்று எம்மால் இவ்வளவு தான் வழங்க முடியும் என்று அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டனர்.

அன்று ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த வேலைத் திட்டங்களையே இன்று இவர்களும் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக் கின்றனர்.

நாடு அநுரவுக்கு எனக் கூறிய இளைஞர்கள் இன்று வீதிக்கு இறங்கியுள்ளனர். தொழில் கோரி பட்டதாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## நாட்டுக்கு ஆபத்து ஏற்படும்பட்சத்தில் ரணில் நிபந்தனையின்றி உதவுவார்!

### ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, மார்ச் 24

**நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் எவ்வித நிபந்தனையும் இன்றி தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராகவே இருக்கிறார். பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை முழுமையாக வாசிப்பவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வேலைத்திட்டங்களிலிருந்து வெளியேறுவர் - இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.**



கொழும்பில் நடந்த மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இதனை அவர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் யானை சின்னத்தின் கீழ் ஐக்கிய தேசிய கட்சி தேர்தலில் களமிறங்கியுள்ளது. நாடு வீழ்ச்சியடைந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய தேசிய கட்சியே அதனை மீட்டெடுத்திருக்கிறது.

இதற்கமைய இனிவரும் காலங்களிலும் நாட்டுக்காக ஐக்கிய தேசிய கட்சி அதன் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும். 1994ஆம் ஆண்டு எதிர்க்கட்சி தலைவரானதிலிருந்தே ரணில் விக்கிரமசிங்க இலக்கு வைக்கப்பட்டிருக்கிறார்.

எனவே, தற்போது தேவையற்ற பிரச்னைகளை ஏற்படுத்த வேண்டாம் என அவ்வாறானவர்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை சமூகத்தில் எந்தவொரு சமூகத்தினருக்கும் தாக்கத்தை ஏற்படுத்தப் போவதில்லை. எனவே, முதலில் இந்த அறிக்கையை முழுமையாக வாசிக்குமாறு சகலரையும் வலியுறுத்துகிறோம்.

அவ்வாறு அதனை முழுமையாக வாசிப் பவர்கள் ரணில் விக்கிரமசிங்க வுக்கு எதிரான வேலைத் திட் டங்களிலிருந்து வெளியே றுவர். இம்முறை தேர்தலில் அரசாங்கத்தை விடுத்து ஏனைய கட்சிகளுக்கே மக்கள் வாக்க ளிப்பர்.

நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் எவ்வித நிபந்தனையும் இன்றி தேவை யான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு அவர் தயாரா கவே இருக்கிறார். எனவே, இளம் தலைமுறையினர் வர லாற்றைத் தெரிந்து கொண்டு அதற்கமைய தீர்மானங்களை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## ஊழியரின் வருடாந்த கொடுப்பனவை அதிகரித்தது துறைமுக அதிகார சபை

கொழும்பு, மார்ச் 24

துறைமுக அதிகார சபை ஊழியர்களுக்கு வழங்கப்படும் வருடாந்த கொடுப்பனவு 60 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இதுவரை வழங்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபாய் கொடுப்பனவு ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் அதிகரிக்கப் பட்டுள்ளதாக இலங்கை துறைமுக அதிகார சபையின் நிர்வாக இயக்குநர் பொறியிலாளர் கனக ஹேமச்சந்திர தெரிவித்துள் ளார்.

மேலும், இந்த வருடம் வழங்கப்படவுள்ள ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு ஏப்ரல் மாதத்தில் 80 ஆயிரம் ரூபாயாகவும் மீதமுள்ள 80 ஆயிரம் ரூபாய் டிசெம்பர் மாதத்தில் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட் டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்- துறைமுக அதிகார சபையால் ஈட்டப்படும் இலாபத்தில் 500 கோடி ரூபாய் சுகாதாரம் மற்றும் கல்விக்காக ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

துறைமுக அதிகார சபை ஊழியர்களில் 90 சதவீதத்தினரின் மாதச் சம்பளம் 3 அல்லது 4 இலட்சத்துக்கும் அதிகமாக காணப்பட்டது.

ஒரு சராசரி தொழிலாளி மூன்று இலட்சம் ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுவதாகவும் கொழும்பு துறைமுகத்தில் உள்ள ஜே. சி. ரி. முனையத்தில் பணிபுரியும் ஒரு சராசரி ஊழியர் மாதத்துக்கு 600 முதல் 700 மணிநேரம் வரை கூடுதல் நேரம் வேலை செய்கின்றனர் - என்றார். (அ)

## ரணில் விக்கிரமசிங்கவுக்கு சீனத் தூதரகம் விருந்து!



கொழும்பு, மார்ச் 24

கொழும்பில் உள்ள சீனத் தூதுவரின் இல்லத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சீனத் தூதுவர் இராப் போசனம் வழங்கியுள்ளார்.

இன்றைய தினம் ரணில் விக்கிரமசிங்கவின் 76ஆவது பிறந்ததினமாகும். அதை முன்னிட்டே அவருக்கு இந்த இராப் போசனம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், ரணில் விக்கிரமசிங்கவின் பாரியார் மைத்திரி விக்கிரமசிங்கவும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலஞ்சம் பெற முயன்ற 3 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 24

5 இலட்சம் ரூபாயை இலஞ்சம் பெற முயன்ற வர்த்தகர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் உட்பட மூன்று சந்தேக நபர்களை இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு கைது செய்துள்ளது.

இரத்தினபுரி, பனாமுர பகுதியை சேர்ந்த வைத்தியர் ஒருவர் செய்த முறைப்பாட்டில் சந்தேகநபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். ஆயுர்வேத வைத்திய சபையில் வைத்திய சான்றிதழை பெற்றுக்கொள்ள 10 இலட்சம் ரூபாய் கோரியதாக சந்தேகநபர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களில் ஒருவர் களனியைச் சேர்ந்தவர் எனவும், வர்த்தகர் பிலிமத்தலாவைச் சேர்ந்தவர் எனவும், அரச சார்பற்ற நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் நாவலப்பிட்டியைச் சேர்ந்தவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் சொகுசு ஹோட்டல் ஒன்றில் வைத்து இலஞ்சம் பெற முயன்றபோது பிடிபட்டனர். சந்தேக நபர்கள் கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

## ஜப்பானிய கப்பல் கொழும்பில்!

கொழும்பு, மார்ச் 24

ஜப்பானின் கடல்சார் தற்காப்புப் படை கப்பல் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

'முரசமி' என்ற கப்பல், தனது தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த வேளை இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கு அமைவாக வரவேற்றனர்.

இந்தக் கப்பலானது 51 மீற்றர் நீளம் என்பதுடன், 200 அங்கத்தவர்களை கொண்டுள் ளது. கப்பலின் கட்டளை அதி காரியாக கொமாண்டர் ஹயா கவா மசஹிரோ பணியாற்றுகிறார்.

இந்தப் போர் கப்பலானது, இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் அதன் அங்கத்துவ குழுவினர்கள் கொழும்பு பிரதேசத்தில் உள்ள சுற்றுலா தலங்களை பார்வையிட்டனர். (அ)

## பிரசார செலவு ஒழுங்குபடுத்தல் அரசியல் தரப்புகளுடன் பேச்சு!



கொழும்பு, மார்ச் 24

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் பிரசார செலவினங்களை ஒழுங்குபடுத்துவது குறித்து அரசியல் கட்சிகளின் பொதுச்செயலாளர்கள் மற்றும் சுயேச்சை குழுவின் பிரதிநிதிகளுடன் தேர்தல்கள் ஆணைக்குழு கலந்துரையாடியது.

இராஜகிரியவில் உள்ள தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவிக்கையில்,

சமகால நிலைமைகளுக்கு அமைவாக வேட்பாளர்களுக்கான பிரசார செலவு வரம்புகளை நிர்ணயிப்பது தொடர்பில் தேர்தலில் போட்டியிடும் தரப்பினரின் அபிப்பிராயம் கேட்டறியப்பட்டது. எனினும், இந்தக் கலந்து ரையாடலில் செலவினத் துக்கான இறுதித் தொகை இன்னமும் தீர்மானிக்கப்பட வில்லை. மீண்டும் ஒரு தடவை கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். அதன்பின்னர் இறுதியான தொகை தீர்மானிக்கப் பட்டு வர்த்தமானியில் அறிவிக்கப்படும் - என்றார்.

அத்துடன், எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் கிட்டத்தட்ட 80 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்த வேட்பாளர்கள் 107 அங்கீகரிக்கப்பட்ட அரசி யல் கட்சிகள் மற்றும் 49 சுயேச்சைக் குழுகளை பிரதிநிதித் துவப்படுத்துகின்றனர். (ஐ)

## மின்னல் தாக்கம் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 24

பலத்த மின்னல் தாக்கம் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அநுராதபுரம், வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் பலத்த மின்னல் தாக்கம் ஏற்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மின்னல் தாக்கங்களால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் பொது மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஸா விவகாரத்தில் இலங்கை வெளியிட்டது

# கண்டன அறிக்கையல்ல கண்துடைப்பு அறிக்கை!

மட்டக்களப்பு, மார்ச்.24

உக்கிரம் அடைந்து வரும் காஸா விவகாரத்தில் அரசாங்கத்தின் சார்பில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள ஊடகச் செய்தி அரசாங்கத்தின் கண்டன அறிக்கையல்ல என்றும், மூன்றே மூன்று வரிகளைக் கொண்ட அந்த செய்தியில் இஸ்ரேலின் அடாவடித்தனத்தையோ, அதற்கான அமெரிக்காவின் ஆதரவையோ கண்டிக்கும் ஒரு சொல் கூட இல்லாதது அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் அளித்ததாக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பின ருமான நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

,புனித ரமழான் மாதத் தில், பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பலஸ்தீன முஸ்லிம்கள் நோன்பு நோற்றுக் கொண்டிருக்கும் நிலையில், காஸா மீது பெரும் தாக்குதல்களை நடத்தி, அங்கு இனப்படுகொலையில் ஈடுபட்டிருக்கும் இஸ்ரேலின் ஈனச் செயலை பல்வேறு உலக நாடுகளும் கண்டித்தும், அந்த நாட்டுக்கு எதிராக சில இராஜதந்திர நடவடிக்கைகளையெடுத்தும் இருக்கின்றன.

இந்த மனிதாபிமானமற்ற விடயத்தில் இலங்கை அரசாங்கம் இதுவரை எந்த விதமான ஆக்கபூர்வமான முன்னெடுப்பையும் மேற்கொள்ளாமல் தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருவதைச் சுட்டிக் காட்டி சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆதாரபூர்வமான அறிக்கையொன்றை வெளியிட்டதோடு, அது பற்றி பாராளுமன்றத்திலும் உரையாற்றியிருந்தார். நானும் அதைப்பற்றி பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்தேன்.

இந்தப் பின்னணியில், வெறு மனே அரசாங்கத்தின் சார்பில் வெளிவிவகார அமைச்சு கடந்த 21 ஆம் திகதி, யாரும் கையொப்பம் இடாத ஓர் உப்புச்சப்பற்ற ஊடகச் செய்தியை மட்டும் வெளியிட்டு, இந்த நாட்டு முஸ்லிம்களைத் திருப்திப்படுத்துவதற்கு எத்தனித்துள்ளதையிட்டு நாங்கள் கவலையடைகின்றோம்.

அரசாங் கம், இவ்வாறான உணர்வுபூர்வமான விடயங்களில் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வது அவசியமாகும் என் றுள்ளது. (எ)

# “தேர்தல் வியாபாரிகளுக்கு காரைதீவில் இடமில்லை”

காரைதீவு, மார்ச்.24

தமிழ் மக்கள் என்றும் தமிழ்க் கட்சிக்கே வாக்களிக்க வேண்டும். எமது தமிழினத்தின் உரிமை மற்றும் இருப்பை அழிக்கும் அபிவிருத்தி என்ற மாயை எமக்குத் தேவையில்லை என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச சபையின் வேட்பாளரும் காரைதீவு முன்னாள் தவிசாளருமான கி. ஜெயசிறில் தெரிவித்தார். தேர்தல் வியாபாரிகளுக்கு இங்கு இடமில்லை என்றும் அவர் கூறினார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி வீட்டு சின்னத்தில் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் தேர்தலில் போட்டியிடுகின்றது. அம்பாறை மாவட்டத்தில் உள்ள 7 உள்ளூராட்சி மன்றங்களில் 6 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அம்பாறை மாவட்டத்தில் தமிழரசுக்கட்சியின் வேட்பு மனுக்கள் எந்த இடத்திலும் நிராகரிக்கப்படவில்லை. சகல சபைகளிலும் எமது கட்சி ஆட்சி அமைக்கும். சில சபைகளில் தமிழ் பேசும் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க இருக்கிறோம்.

தேர்தல் வந்தால் அபிவிருத்தி என்று கூறி பணத்தின் பின்னால் அலையும் கொள்கை இல்லாதவர் நம் மத்தியில் இருக்கிறார்கள். அவர்கள் சொந்த ஊரையே காட்டிக் கொடுப்பார்கள்.

அவர்களுக்கு காரைதீவில் இடமில்லை. இங்கு தேர்தல் வியாபாரிகளுக்கு இடமில்லை. காரைதீ வில் எமக்கு போதிய ஆசனம் கிடையாது விட்டால் எமது இருப்பு பாதிக்கப்படும். இதற்கு எந்தவொரு தமிழ் மகனும் துணை போக மாட்டான். எனவே, தமிழ் மக்கள் அனை வரும் தாய்க் கட்சியாகிய தமிழ் அரசு கட்சிக்கே வாக்களிக்க வேண்டும்”- என்றார். (எ-01)

# கல்முனை நீதிமன்றத்திலிருந்து தப்பியோடிய சந்தேகநபர் கைது

கல்முனை, மார்ச்.24

கல்முனை நீதிமன்றத்திலிருந்து தப்பியோடிய சந்தேக நபரை கடந்த 20 ஆம் திகதி இரவு நிந்தவூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் - நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அட்டப்பளம் பகுதியில் ஆடு திருடிய இரண்டு சந்தேக நபர்களை நிந்தவூர் பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் கடந்த 13 ஆம் திகதி கல்முனை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்ட போது அவர்களில் ஒருவர் நீதிமன்றத்தில் இருந்து தப்பியோடினார்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தப்பியோடிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது, சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப் பொருட்கள் என்பன சட்டநடவடிக்கைக்காக நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதான இருவரிடமும் மேற்கொண்ட மேலதிக விசாரணையின் போது குறித்த சந்தேக நபருக்கு நிலுவையில் ஆடு, மாடு, தங்க நகை உள்ளிட்ட பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐந்துக்கு மேற்பட்ட பிடியாணைகள் காணப்பட்டமை தெரியவந்தது. (எ)

## இளைஞர்களுக்கான திட்டங்களை முன்னெடுப்போம்

சாய்ந்தமருது, மார்ச்.24

போதைப்பொருளை ஒழித்து இளைஞர்களுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக காரைதீவு பிரதேச சபைக்கு ஐக்கிய சமாதான கூட்டமைப்பு தனித்துப்போட்டியிடுவதாக அந்தக் கட்சியின் வேட்பாளர்கள் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் அமைந்துள்ள ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் அலுவலகத்தில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு குறிப்பிட்டனர். (எ-01)

# போலி நாணயத்தாள் மீட்பு


திருகோணமலை, மார்ச்.24

மூதூர் பிரதேசத்தில் போலி 5000 ரூபாய் நாணயத்தாள் புழக்கம் அதிகரித்துள்ளது.

திருகோணமலை மாவட் டம் மூதூர் பிரதேசத்தில் 5000 ரூபாய் போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில் இருப்பதாக தகவல் வெளியாகிய நிலையில், நேற்று ஒரு வர்த்தக நிலையத்தில் மாற்றப்பட்ட போலி நாணயத்தா ளின் படம் வெளியாகியுள்ளது.

அதிகாரிகள் இந்த விவகாரத்தில் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சந்தேகத்துக்கிடமான நாணயத்தாள்கள் இருப்பின் உடனடியாக அருகிலுள்ள




பொலிஸ் நிலையத்தில் தகவல் வழங்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட் டுள்ளது. (எ)

# விக்ரோரி அணி சம்பியன்



திருகோணமலை, மார்ச்.24

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் இயங்கிவரும் ஈவின்ங்ஸ் பெண்களுக்கான சுதந்திர அமைப்பினால் “பெண்களும் மைதானத்தை பயன்படுத்தும் உரிமை உண்டு“ என்ற கருப்பொருளில் வருடந்தோறும் கிராமமட்ட மகளிர் அமைப்புகளுக்கு இடையில் நடத்தும் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி திருகோணமலை மக்கேய்சர் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இம்முறை 7 அணிகள் பங்கு பற்றின. இதில், இலுப்பைக்குளத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய விக்ரோரி அணியினர் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தனர். இதன்போது, வெற்றியீட்டிய அணியினருக்கு கேடயங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பெண்கள் சிறுவர்கள் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி ஏ. என். ஜெயமாலி மற்றும் சட்டத்தரணி பிரபாலினி குலசேகரன், ஈவின்ங்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி காயத்திரி நளினகாந்தன், மேக்கன்டைன் வங்கி நிறுவனத்தின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (எ)

# 20 கட்சிகள், 24 சுயேச்சை குழுக்கள் அம்பாறை மாவட்டத்தில் வேட்புமனு

கல்முனை, மார்ச்.24

அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற் காக 20 அரசியல் கட்சிகளும், 24 சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 44 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும், மாவட்ட அரசாங்க அதிபருமான சிந்தக அபேவிக்கிரம தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபை, அம்பாறை நகர சபை, திருக்கோவில், அட்டாளைச்சேனை, இறக்காமம், தமண, உகன, நாமல் ஓயா, மஹா ஓயா, பதியத்தலாவ, காரைதீவு, அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை, பொத்துவில், ஆலையடிவேம்பு, லகுகல, நாவிதன்வெளி, தெஹியத்த கண்டிய ஆகிய பிரதேச சபைகள் உட்பட 19 உள்ளூராட்சி சபைகளுக்கு வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்,

தேசிய காங்கிரஸ், இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயக கட்சி ஆகிய பிரதான கட்சிகள் உட் பட சுயேச்சைக் குழுக்களும் தங்களது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. (எ)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

மட்டக்களப்பு, மார்ச்.24

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவில் கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்ட நிலையில் 06 பரல்களில் கோடா, கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்முனை பிரதேச வாவியை அண்டிய அடர்ந்த காட்டுப் பகுதியில் நீண்ட நாட்களாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலை யத்தை பொலிஸார் கடந்த 21 ஆம் திகதி காலை சுற்றிவளைத்தனர்.

இந்தச் சுற்றிவளைப்பு தேடுதலின் போது 06 பரல்களில் ஆயிரக்கணக்கான லீற்றர் கோடா மற்றும் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளன. சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கசிப்பு உற்பத்தி நிலையத்தில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பெருமளவிலான உபகரணங்களும் பரல்கள், போத்தல்கள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிவாசலுக்குள் நுழைந்து பயங்கரவாதிகள் தாக்குதல்!

## நைஜரில் 44 பேர் உயிரிழந்தனர்

டகார், மார்ச்.24

**நைஜரில் உள்ள பள்ளிவாசலுக்குள் நுழைந்து பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத்தனமான தாக்குதலில் 44 பேர் உயிரிழந்தனர்.**

நைஜரின் மேற்கே மாலி மற்றும் புர்கினா பசோ ஆகிய இரு நாடுகளின் எல்லையையொட்டிய கொகரவ் நகரத்துக்கு உட்பட்ட பம்பிடா கிராம பகுதியில் பள்ளிவாசல் ஒன்றில் முஸ்லிம்கள் பலர் நேற்று முன்தினம் மதியம் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

அப்போது, ஆயுதமேந்திய பயங்கரவாதிகள் சிலர் பள்ளிவாசலை சூழ்ந்து கொண்டு தாக்குதல் நடத்தினர். இதில், 44 பேர் பலியாகினர்.

13 பேர் படுகாயமடைந்தனர். இதனை அந்த நாட்டின் உள்துறை அமைச்சு வெளியிட்டஅறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

இதனையடுத்து, 3 நாட்கள் தேசிய துக்க தினம் கடைப்பிடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பே காரணம் என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. நைஜர், மாலி மற்றும் புர்கினா பசோ ஆகிய 3 நாடுகளும் சமீப ஆண்டுகளாக இராணுவ சதியை எதிர்கொண்டு வருகின்றன.

கிளர்ச்சியாளர்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ள சூழலில், பல்வேறு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதில், பொது மக்கள் பலர் பலியாகினர். (எ)

# தென்கொரியாவில் பயங்கர காட்டுத்தீ!

## நால்வர் பலி, அவசரநிலை அறிவிப்பு



சியோல், மார்ச்.24

தென்கொரியாவில் பயங்கர காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு பேரிடர் நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் கொரியாவின் சான்சியோங் மாகாணத்திலுள்ள வனப்பகுதியில் கடந்த 21 ஆம் திகதி பிற்பகல் 03.00 மணியளவில் காட்டுத் தீ உருவாகி அப்பகுதி முழுவதும் பரவியது. அதனைத் தொடர்ந்து, அந்த நாட்டின் தீயணைப்புப் படையினர் தீயை அணைக்க கடுமையாகப் போராடி வரும் நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 03.00 மணியளவில் 65 சதவிகித காட்டுத் தீ அணைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, காட்டுத் தீயினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் சுமார் 290 ஹெக்டேராக விரிவடைந்துள்ள நிலையில் அப்பகுதியைச் சுற்றியுள்ள 8 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மூன்று வெவ்வேறு பகுதிகளிலும் ஏற்பட்ட தீயை அணைக்க தீயணைப்பு படையினர் போராடி வந்தனர். இந்தத் தீ விபத்து சம்பவத்தில் நால்வர் உயிரிழந்தனர்.

ஆறு பேர் காயமடைந்துள்ளதாகவும் தென்கொரிய வனத்துறை தெரிவித்துள்ளது.

இதனிடையே தென்கிழக்கு நகரமான உல்சானிலும் அருகிலுள்ள கியோங்சாங் மாகாணத்திலும் சுமார் 620 பேர் நேற்று முன்தினம் காட்டுத் தீயிலிருந்து தப்பித்து பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளதாக உள்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், தேவையான அனைத்து உபகரணங்களையும் பயன்படுத்தி காட்டுத் தீயை அணைக்க அந்த நாட்டு மீட்புப் படைகளுக்கு தென் கொரியாவின் இடைக்கால ஜனாதிபதி சோய் சங்-மோக் உத்தரவிட்டுள்ளார். (எ)

# லெபனான் தாக்குதலுக்கு பதிலடி கொடுத்த இஸ்ரேல்

பெய்ரூட், மார்ச்.24

லெபனான் தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் இருவர் பலியாகினர்.

ஹிஸ்புல்லா அமைப்புடன் இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தி அது அமுலில் உள்ள சூழலில், நேற்று முன்தினம் திடீரென இஸ்ரேல் மீது லெபனான் ரொக்கெட் தாக்குதல் நடத்தியது.

கடந்த டிசெம்பரில் இருந்து இதுவரை 2ஆவது முறையாக லெபனானிலிருந்து ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து, லெபனானில் உள்ள 20இற்கும் மேற்பட்ட இலக்குகள் மீது தாக்குதல்களை நடத்தும்படி இராணுவத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் நேற்றுக்காலை நடத்திய வான்வழித் தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர். 8 பேர் காயமடைந்தனர்.

ஹிஸ்புல்லாவுடன் கூட்டணியில் உள்ள ஹமாஸ் அமைப்புடனான போர்நிறுத்த ஒப்பந்தம் கைவிடப்பட்ட சூழலில், லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. இஸ்ரேலின் பரம எதிரியான ஈரான் இந்த இரு அமைப்புகளுக்கும் ஆதரவளித்து வருகிறது. லெபனானில் ஏற்கனவே நடந்த தாக்குதல்களில் இதுவரை 4 ஆயிரம் பேர் பலியாகினர். (எ)

# அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு! மூவர் உயிரிழப்பு

வாஷிங்டன், மார்ச்.24

அமெரிக்காவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூவர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் நியூமெக்சிக்கோ மாகாணம் லாஸ் குரூசஸ் பகுதியில் பூங்காவுள்ளது. இந்த பூங்காவில் நேற்று முன்தினம் இரவு சட்டவிரோதமாக கார் கண்காட்சி நடத்தப்பட்டுள்ளது. இதில், 200இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

அப்போது, திடீரென இரு குழுக்களுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் முற்றிய நிலையில் இரு தரப்பினரும் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் மூவர் உயிரிழந்தனர். மேலும், 15 பேர் படுகாயமடைந்தனர்.

# அமெரிக்காவிலிருந்து 5 இலட்சம் மக்களை நாடு கடத்த நடவடிக்கை

வாஷிங்டன், மார்ச்.24

அமெரிக்காவிலிருந்து 5 இலட்சம் பேரை நாடு கடத்த நடவடிக்கை அந்த நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பொருளாதார ரீதியாகவும் வன்முறை, உள்நாட்டு போர் போன்ற காரணங்களாலும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள கியூபா, ஹைதி, வெனிசுலா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் வாழ்வாதாரம் தேடி கூட்டம் கூட்டமாக அமெரிக்காவில் குடிபெயர்ந்தனர். பெரும்பாலும் இவர்கள் சட்டவிரோதமாக எல்லையை கடந்து அமெரிக்காவுக்குள் நுழைந்தனர்.

இந்த பிரச்னைக்கு தீர்வு காணவும், அதே வேளையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையிலும் ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையிலான அரசு கடந்த 2022 அக்டோபரில் மனிதாபிமான அடிப்படையில் "சி.எச்.என்.வி" என்ற திட்டத்தை செயல்படுத்தியது.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற ட்ரம்ப், "சி.எச்.என்.வி" திட்டத்தின் கீழ் அமெரிக்காவில் குடிபெயர்ந்த மக்கள் அமெரிக்கர்களின் வேலை வாய்ப்புகளை பறிப்பதாக குற்றஞ்சாட்டி அந்தத் திட்டத்தை இரத்து செய்தார். இதன் தொடர்ச்சியாக தற்போது, "சி.எச்.என்.வி" திட்டத்தின் கீழ் அமெரிக்காவில் வசித்து வருபவர்களின் தற்காலிக குடியுரிமைக்கான சட்ட அந்தஸ்தை ட்ரம்ப் நிர்வாகம் இரத்துச் செய்துள்ளது.

இதன் மூலம் கியூபா, ஹைதி, நிகரகுவா மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 5 இலட்சத்து 32 ஆயிரம் பேர் ஏப்ரல் 24ஆம் திகதிக்கு பிறகு அமெரிக்காவில் தங்குவதற்கான சட்டபூர்வ அங்கீகாரத்தை இழக்கின்றனர்.

எனவே ஏப்ரல் 24ஆம் திகதிக்குள் அவர் கள் தாமாக தங்களின் நாடுக ளுக்குத் திரும்பாவிட்டால் அனைவரும் நாடு கடத்தப்படு வார்கள் என ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது.(எ)

# நமீபியாவின் முதல் பெண் ஜனாதிபதியாக நெடும்போ

விண்ட்ஹோயிக், மார்ச்.24

நமீபியாவின் முதல் பெண் ஜனாதிபதியாக நெடும்போ பதவியேற்றுள்ளார்.

ஆபிரிக்க நாடான நமீபியாவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தேர்தல் நடைபெற்றது. இதில் தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் அமைப்பு கட்சி சார்பில் போட்டியிட்ட நெடும்போ நந்தி தைத்வா, 58 சதவீதம் வாக்குகள் பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அவரை எதிர்த்து போட்டியிட்ட மாற்றத்துக்கான சுதந்திர தேசபக்தர்கள் கட்சி 26 சதவீதம் வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது.

இந்த நிலையில் தலைநகர் விண்ட்ஹோயிக்கில் உள்ள பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவரது பதவியேற்பு விழா நடைபெற்றது. அப்போது, முன்னாள் ஜனாதிபதி நங்கோலா பும்பா அதிகாரத்தை நெடும்போவிடம் ஒப்படைத்தார். இந்த நிகழ்ச்சியில் தன்சானியா ஜனாதிபதி சாமியா சுலுஹூ ஹாசன் உட்பட பல நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இதன்மூலம், நாட்டின் முதல் பெண் ஜனாதிபதி மற்றும் ஆபிரிக்காவின் 2ஆவது பெண் ஜனாதிபதி என்ற பெரு மையை நெடும்போ பெற்றுள்ளார். (எ)

# நீதிபதியை விமர்சிப்போருக்கு எலான் மஸ்க் தாராள நிதியுதவி

வாஷிங்டன், மார்ச்.24

அமெரிக்காவில் நீதிபதிகளை விமர்சனம் செய்வோருக்கு தொழிலதிபர் எலான் மஸ்க் தாராளமாக நிதியுதவி வழங்கி வருகிறார்.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எடுக்கும் முடிவுகளை தடுக்கும் வகையில் உத்தரவுகளை பிறப்பிக்கும் நீதிபதிகளுக்கு எதிராக சமூக வலைத்தளங்கள் மூலம் மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு, நீதிபதிகளுக்கு எதிராக கையெழுத்து இயக்கமும் நடத்தப்பட்டு வருகிறது. இந்தச் சூழலில் ட்ரம்புக்கு எதிரான நீதிபதிகளை விமர்சிக் கும் நபர்கள், குழுக்களுக்கு தொழிலதிபர் எலான் மஸ்க் தாராளமாக நிதியுதவி வழங்கி வருவதாக தகவல்கள் வெளியா கியுள்ளன. இதுவரை அவர் இலங்கை மதிப்பில் சுமார் 19 இலட்சம் ரூபாயை வழங்கியி ருப்பதாகக் கூறப்படுகிறது. இதேவேளை, நீதிபதிக ளுக்கு எதிரான கையெழுத்து இயக் கத்தில் பங்கேற்கும் நபர்களுக்கு இலங்கை மதிப்பில் தலா 30 ஆயிரம் ரூபாயை எலான் மஸ்க் வழங்கி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (எ)

# "எனது பணத்தை கொடுப்பேன்"

வாஷிங்டன், மார்ச்.24

எனது சொந்த பணத்தை சுனிதா வில்லியம்ஸுக்கு கொடுப்பேன் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

9 மாத காத்திருப்புக்குப் பின்னர் அண்மையில் சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து பூமி திரும்பினார் இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ். அவரது 8 நாள் பயணம் 9 மாத கால பயணமாக மாறிய நிலையில் அவருக்கு கூடுதல் சம்பளம் வழங்கப்படுமா? என்ற கேள்விக்கு ட்ரம்ப் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

"யாரும் என்னிடம் அது குறித்து எதுவும் சொல்லவில்லை. அப்படியிருந்தால் எனது சொந்த பணத்தை கொடுக்கத் தயார்"என ட்ரம்ப் தெரிவித்தார்.

வெள்ளை மாளிகை யில் நேற்று முன்தினம் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு ட்ரம்ப் மேற்கண்டவாறு பதிலளித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழு விக்கெட் வித்தியாசத்தில் ஆர்.சி.பி. அணி அபார வெற்றி


கொல்கத்தா, மார்ச்.24

ஐ. பி. எல். - 2025 முதல் போட்டியில் ஆர். சி. பி. அணி 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியாவில் நடைபெறும் ரி - 20 கிரிக்கெட் தொடரான ஐ. பி. எல்லின் 18ஆவது சீசன் நேற்று முன்தினம் தொடங்கியது. கொல்கத்தா ஈடன்கார்டனில் நடைபெற்ற தொடக்க ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸை சந்தித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 174 ஓட்டங்கள் சேர்த்தது. பின்னர் விளையாடிய ஆர். சி. பி. அணி 16. 2 ஓவரில் 3 விக்கெட்கள் மட்டும் இழந்து 177 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

பெங்களூரு அணி சார்பில் விராட் கோலி 59, பில் சால்ட் 56, அணித் தலைவர் ரஜத் பட்டிதார் 34 ஓட்டங்கள் எடுத்தனர்.

கொல்கத்தா அணி தரப்பில் ரஹானே 56, சுனில் நரேன் 44, ரகுவன்ஷி 30 ஓட்டங்கள் எடுத்தனர். பெங்களூரு அணியின் க்ருணால் பாண்டியா 3, ஹேசில்வுட் 2 விக்கெட்களை வீழ்த்தினர். கொல்கத்தா அணியின் அரோரா, வருண், சுனில் நரேன் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். (எ)




# ஐ. பி. எல். கிரிக்கெட்டில் கோலி மாபெரும் சாதனை


கொல்கத்தா, மார்ச்.24

ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டி தொடரில் வேறு எந்த வீரரும் படைத்திராத மாபெரும் சாதனையை விராட் கோலி படைத்துள்ளார்.

18ஆவது ஐ.பி.எல். தொடர் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் கோலாகலமாக தொடங்கியது. இதில், நடப்பு சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸை சந்தித்தது. இதில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் ஆர். சி. பி. அணி அபார வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக விராட் கோலி 59 ஓட்டங்கள் குவித்தார்.

முன்னதாக இந்த ஆட்டத்தில் விராட் கோலி 38 ஓட்டங்கள் அடித்தபோது கொல்கத்தாவுக்கு எதிராக 1000 ஓட்டங்களை கடந்தார். இவர் ஏற்கனவே சென்னை, டில்லி, பஞ்சாப் அணிகளுக்கு எதிராகவும் 1000 ஓட்டங்கள் அடித்துள்ளார்.

இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் குறிப்பிட்ட 4 அணிகளுக்கு எதிராக 1000 ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற வரலாற்று சாதனையை கோலி படைத்துள்ளார். வேறு எந்த ஒரு வீரரும் குறிப்பிட்ட 2 அணிகளுக்கு மேல் 1000 ஓட்டங்கள் அடிக்கவில்லை. (எ)




# மியாமி ஓபின் ரெனிஸில் அல்காரஸ் அதிர்ச்சி தோல்வி



மியாமி, மார்ச்.24

2ஆவது சுற்றில் அதிர்ச்சி தோல்வியடைந்த அல் காரஸ் மியாமி தொடரிலிருந்து வெளியேறினார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள மியாமி ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில், ஸ்பெயினின் முன்னணி வீரரான கார்லஸ் அல்காரஸ், பெல்ஜியத்தின் டேவிட் கோபினுடன் மோதினார்.

இதில் அல்காரஸ் எளிதில் வெற்றி பெறுவார் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். அதற்கேற்றவாறே முதல் செட்டை அல்காரஸ் கைப்பற்றினார். ஆனால், அடுத்த 2 செட்களை கோபின் கைப்பற்றி அல்காரஸூக்கு அதிர்ச்சி கொடுத்தார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டேவிட் கோபின் 5-7, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன் னேறினார். தோல்வியடைந்த அல்காரஸ் 2ஆவது சுற் றோடு தொடரிலிருந்து வெளியேறினார். (எ)



## 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி

வெலிங்டன், மார்ச்.24

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ரி - 20 போட்டியில் 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில், முதல் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி மவுண்ட் மவுங்கானுயில் நேற்று நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்களை இழந்து 204 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக பெத் மூனி 70 ஓட்டங்கள் அடித்தார்.

பின்னர் 205 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணி 16.1 ஓவர்களில் 122 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 2-0 என்ற கணக்கில் ஆரம்பத்திலேயே கைப்பற்றியுள்ளது.

நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக அமெலியா கெர் 40 ஓட்டங்கள் அடித்தார். அவுஸ்திரேலியா தரப்பில் அன்னாபெல் சதர்லேண்ட் 4 விக்கெட்களும், அலனா கிங் 3 விக்கெட்களும், டர்சி பிறவுண் 2 விக்கெட்களும் வீழ்த்தினர். பெத் மூனி ஆட்ட நாயகியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ரி - 20 போட்டி வெலிங்டனில் நாளை மறுதினம் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. (எ)

# ரி - 20 கிரிக்கெட்டில் பாகிஸ்தான் சாதனை

ஆக்லாந்து, மார்ச்.23

சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி உலக சாதனை படைத்துள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற 3 போட்டிகளின் முடிவில் நியூசிலாந்து 2-1 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

3ஆவது ரி - 20 போட்டி ஆக்லாந்தில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 19.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 204 ஓட்டங்கள் சேர்த்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக மார்க் சப்மேன் 94 ஓட்டங்கள் அடித்தார். பாகிஸ்தான் தரப்பில் ஹாரிஸ் ரவுப் 3 விக்கெட்களும், ஷஹீன் ஷா அப்ரிடி, அப்ரார் அகமது மற்றும் அப்பாஸ் அப்ரிடி தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 205 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய பாகிஸ்தான் அணி 16 ஓவர்களிலேயே ஒரு விக்கெட் மட்டும் இழந்து 207 ஓட்டங்கள் குவித்து 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அதிகபட்சமாக ஹசன் நவாஸ் 105 ஓட்டங்களும், அணித் தலைவர் சல்மான் ஆஹா 51 ஓட்டங்களும் குவித்தனர். ஹசன் நவாஸ் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெறும் 16 ஓவர்களில் 205 ஓட்டங்களை சேர்த்து அசத்தியது. இதன் மூலம் சர்வதேச ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் 200 இற்கும் மேற்பட்ட ஓட்டங்களை அதிவேகமாக துரத்திய அணி என்ற மாபெரும் உலக சாதனையை பாகிஸ்தான் படைத்துள்ளது.

இதற்கும் முன்னர் மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிராக தென்னாபிரிக்க அணி 17.4 ஓவர்களில் 206 ஓட்டங்களை அடித்ததே அதிகபட்சமாக இருந்தது. தற்போது அதனை முறியடித்துள்ள பாகிஸ்தான் புதிய உலக சாதனை படைத்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னக்கோனை பதவி நீக்க பாராளுமன்றத்தால் முடியாது

## உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

நீதிமன்றத்தின் உத்தரவு நடைமுறையிலிருக்கும் நிலையிலும், நீதிமன்றத்தில் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலும் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து நீக்குவது குறித்து பாராளுமன்றத்தால் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க முடியாது என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்தவை வருமாறு,

பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து தேசபந்து தென்னக்கோனை நீக்குவதற்கான யோசனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், அது தவறான தகவலாகும். அவ்வாறு தென்னக்கோனை தற்போது பொலிஸ்மா அதிபர் பதிவியிலிருந்து நீக்க முடியாது. தற்போது நாட்டில் நீதிமன்ற தடையுத்தரவுக்கு உள்ளாகியுள்ள பொலிஸ்மா அதிபருடன், பதில் பொலிஸ்மா அதிபரொருவரும் இருக்கிறார்.

வழக்கு விசாரணைகள் நிறைவடையும் வரை தென்னக்கோன் பொலிஸ்மா அதிபருக்குரிய பணிகளை செய்வதற்கு நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறெனில், தற்போதும் தென்னக்கோனே பொலிஸ்மா அதிபராவார். நீதிமன்றத்தின் உத்தரவு நடைமுறையிலிருக்கும் நிலையிலும் நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலும் அது குறித்து பாராளுமன்றத்தால் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க முடியாது.

அவ்வாறானதொரு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது நேரடியாக நீதித்துறையில் பாராளுமன்றம் ஆதிக்கம் செலுத்துவதாகவே அமையும். எனவே, நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் வரை தென்னக்கோன் குறித்த எந்தவொரு தீர்மானத்தையும் பாராளுமன்றத்தில் விவாதிக்கவோ, நிறைவேற்றவோ முடியாது. இவ்விவகாரத்தில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால பொய் கூறி பாராளுமன்றத்தை ஏமாற்றியிருக்கிறார்.

தென்னக்கோனின் நியமனம் சட்டரீதியானது என நீதிமன்றம் தீர்ப்பளித்தால் 2031ஆம் ஆண்டு வரை அவர் அந்த பதவியில் நீடிப்பார். எனவேதான் அவரை கைது செய்வதில் பொலிஸார் பின்வாங்கினர் - என்றார். (ஐ)

## தேர்தலை...

மேலும் தெரிவித்தவை வருமாறு,

பாதுகாப்பான தேர்தல் செயல்முறையை எளிதாக்குவதற்கு தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதில் நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். முந்தைய காலத்தில் தேர்தல் பதற்றங்களால் ஏற்பட்ட சவால்களை நாங்கள் நன்கு அறிவோம்.

நியாயமான மற்றும் வெளிப்படையான தேர்தலை உறுதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் தேர்தல் செயல்முறையை முடிந்தவரை நியாயமானதாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுவதற்கு நாங்கள் பணியாற்றி வருகிறோம் -என்றார். (ஐ)

## தீர்வு தருவதாக...

ஒன்றின் உரிமையாளரான சாருஜன் பத்மநாதன்.

பௌத்த சாசன அமைச்சர் எங்களை கொழும்புக்கு அழைத்து சந்திப்பு ஒன்றை ஒழுங்கு செய்தார். அதில், மக்களின் காணிகள் என்றால் மக்களுக்கே கையளிக்க வேண்டும். இது எங்கள் அரசாங்கத்தின் கொள்கை என்று அவர் கூறியிருந்தார்.

இதன் அடிப்படையில், நாம் காணி உறுதிகள் உட்பட அனைத்து ஆதாரங்களையும் அவரிடம் காட்டியிருந்தோம்.

இது தங்களின் விடயத்துக்கு பொறுப்பானதல்ல, காணி அமைச்சுக்கு உரியது. அவர்களும் இந்த விடயம் குறித்து ஆராய்கிறார்கள். இதற்கான தீர்வை எவ்வளவு எவ்வளவு விரைவாக வழங்க முடியுமோ அவ்வளவு விரைவாக வழங்க முயல்கிறோம் என்று கூறியிருந்தார். இந்த நிலையிலேயே, அவருடைய அரசாங்கம் யாருக்கும் தெரியாமல் இரகசியமாக புதிய கட்டடத்தைத் திறக்க முயல்வது மனவருத்தத்துக்குரியது. மக்கள் இதனை உணராவிட்டால் இதுபோல பல விடயங்கள் நடக்கும் எனவே, அனைத்து மக்களும் எங்கள் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

## தையிட்டி...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட அரசியல் தரப்புகள் கறுப்புக் கொடிகளை ஏந்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியில் குவிக்கப்பட்ட பொலிஸார் கைவிலங்கு வைத்திருந்தனர் என்றும் அதனைக் காட்டி "கைது செய்வோம்" என்று தம்மை அச்சுறுத்தினர் என்று போராட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டினர்.

### அம்பலமான குட்டு

முன்னதாக திஸ்ஸ விகாரை வளாகத்துக்குள் சட்டவிரோதமாகக் கட்டடம் அமைக்கப்படுவதாக கடந்த ஆண்டே தகவல்கள் வெளியாகின. ஆனால், விகாரை வளாகத்தை தான் பார்வையிட்டதாகவும் அவ்வாறான கட்டடம் எதுவும் அமைக்கப்படவில்லை என்றும் பதில் அரச அதிபர் ம. பிரதீபன் கூறியிருந்தார். எனினும், அப்போது அமைக்கப்பட்ட கட்டடமே நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டதாக போராட்டக்காரர்கள் சாடினர்.

### காற்றில் பறந்த வாக்குறுதி

இதேவேளை, தையிட்டி திஸ்ஸ விகாரை பகுதியில் கள ஆய்வு செய்து இந்தப் பிரச்னைக்கு விரைவில் தீர்வு எட்டப்படும் என்று புத்தசாசன அமைச்சர் சுனில் செனவி உறுதியளித்திருந்தார். இந்த நிலையில், மேலுமொரு சட்டவிரோத கட்டடம் திஸ்ஸ விகாரை வளாகத்துக்குள் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டமை போராட்டக்காரர்கள் - தமிழ் மக்களிடையே கடும் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (ஐ-05)

## யாழ்.நகரில்...

செய்தனர்.

கைதான சந்தேகநபர்களிடம் இருந்து 805 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது. சந்தேகநபர்கள் 22 மற்றும் 23 வயதுடையவர்களாவர்.

இவர்களை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மன்னார்...

உள்ளூராட்சி சபைகளுக்கு வேட்புமனுக்கள் தாக்கல் கடந்த வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது.

இந்த நிலையில், மன்னார், பூநகரி, தெஹியத்தகண்டி பிரதேச சபைகளுக்கான வேட்புமனு தாக்கல் இன்றைய தினம் ஆரம்பமாகிறது.

இதேவேளை, அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் நாளை மறுதினம் வரை கட்டுப்பணத்தை செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐரோப்பிய...

காப்பு சட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள திருத்தங்கள் தொடர்பில் இந்தக் குழுவுக்கு அரசாங்கம் விளக்கங்களை வழங்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், இலங்கையால் அங்கீகரிக்கப்பட்ட மனித மற்றும் தொழிலாளர் உரிமைகள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை, நல்லாட்சி கொள்கைகளை உள்ளடக்கிய விடயங்கள் குறித்தும் ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. பிளஸ் வரி கண்காணிப்புக் குழு கொழும்பு சந்திப்புகளில் அவதானம் செலுத்தவுள்ளதாக அறிய வருகிறது.

மேலும், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள், சிவில் சமூகம் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதுடன், இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து அறியும் வகையில் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளின் தூதுவர்கள் மற்றும் ஐ. நா. பிரதிநிதிகளை சந்தித்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளும் என்றும் கூறப்படுகிறது.

மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி, பொருளாதாரம், சமூகம் மற்றும் கலாசார உரிமைகள் மற்றும் தொழிலாளர் உறவுகளை பாதிக்கும் பிரச்னைகள் குறித்தும் இந்தக் குழு கூடுதல் அவதானம் செலுத்தவுள்ளது. அத்துடன், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் குறித்து கூடுதல் அவதானம் செலுத்தப்படவுள்ளதுடன், 2017ஆம் ஆண்டில் இலங்கையை ஜி. எஸ். பி. பிளஸ் திட்டத்தில் மீண்டும் இணைப்பதில் பயங்கரவாத தடுப்புச் சட்ட திருத்தம் ஒரு முக்கிய உறுதிமொழியாக இருந்தது. இவ்வாறானதொரு நிலையில் பாகுபாடு காட்டாமை, இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களின் உரிமைகளுக்கும் மரியாதை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் தொடர்ச்சியான பயன்பாடு மற்றும் அடிப்படை சுதந்திரங்களை பயன்படுத்துவதில் உள்ள தடைகள் போன்ற விடயங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்கும் போது, மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், நல்லாட்சி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என நான்கு துறைகளில் 27 நிபந்தனைகளை முன்வைக்கும். இலங்கைக்கு தொடரச்சியாக ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் வழங்க வேண்டுமாயின், இந்த 27 நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தம் உட்பட உறுதிமொழிகளை நிறைவு செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாப்பரசர்...

சேர்க்கப்பட்டார். சுவாச தொற்றால் அவருக்கு நிமோனியா பாதிப்பு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து அவருக்கு 5 வாரங்கள் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆபத்தான நிலையிலிருந்து பாப்பரசர் பிரான்சிஸ் விடுபட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை வத்திக்கானிலுள்ள தனது இல்லத்துக்கு திரும்பினார்.

இல்லத்துக்கு திரும்ப முன்னர் மருத்துவமனையின் யன்னல் வழியாக மக்களுக்கு அவர் ஆசீர்வாதம் வழங்கினார்.

பாப்பரசர் பிரான்சிஸ் சுமார் 12 ஆண்டுகள் றோமன் கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக சேவையாற்றியுள்ளார். 21 வயதில் அவரின் நுரையீரலின் ஒரு பகுதி அகற்றப்பட்டது. இதனால், அவர் பல தொற்று நோய்களுக்கு உள்ளாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வாக்குச்சீட்டு...

வேட்புமனுக்கள் தாக்கல் கடந்த வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது.

இந்த சபைகளுக்காக 2 ஆயி ரத்து 900 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இவற் றில் 425 வேட்புமனுகள் நிராகரிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காய்ச்சலால்...

வருமாறு,

கடந்த 19ஆம் திகதி குறித்த குடும்பஸ்தர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். மறுநாள் இவர் தருமபுரம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அவர் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார். இவரின் மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-05)

## பௌத்த விரிவாக்கலை...

திறந்து வைக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று போராட் டத்தை முன்னெடுத்தது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இன்றையதினம் (நேற்று) இராணுவத்தினரின் வாகனங்கள் ஆட்களை ஏற்றியிறக்கும் பணிகளில் அதிகளவில் ஈடுபட்டுள்ளன. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்தக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டு தொடர்ச்சியாகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தநிலையில் இரண்டு நாட்களுக்கு முன்னர்கூட கொழும்பில் காணி உரிமையாளர்களை அமைச்சர் சந்தித்து, "இது உங்களுடைய காணிகள் என சொன்னால் விடுவிப்போம்", என்று ஒருபுறத்தில் கூறிக்கொண்டு, மறுபுறத்தில் அதே அரச இயந்திரம் சட்டவிரோத விகாரை வளாகத்துக்குள் அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவுக்கு அரச வளங்களை பயன்படுத்திக் கொண்டிருப்பது என்பது அநுர அரசாங்கத்தின் இரட்டை முகத்தைக் காட்டுகிறது.

அநுர ஒருபுறத்திலே தான் இனவாதம், மதவாதத்துக்கு இடமளிக்க மாட்டேன் என சொல்லிக்கொண்டு, தமிழர் தேசத்தில் மேலும்மேலும் பௌத்த விரிவாக்கல் நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார். அவரின் தலைமையில்தான் முன்னெடுக்கப்படுகிறது. பாதுகாப்பு அமைச்சரும் அவர்தான் பௌத்த விவகார அமைச்சரும் அவர்தான்.

எங்கள் மக்கள் இதனைப் புரிந்து கொள்ளவேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில், பாராளுமன்ற தேர்தலில் அற்ப சலுகைகளுக்காக இந்த இனவாத அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிய தமிழ் புத்திஜீவிகளும் இதற்கு பொறுப்புக்கூறவேண்டியவர்கள். இதன்விளைவுகள் எதிர்காலத்தில் எவ்வாறு வந்து முடியும் என்பதை காலம்தான் சொல்ல வேண்டும்.

இந்த திறப்பு விழா நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும் என்பது போராட்டக்காரர்களின் - காணி உரிமையாளர்களின் கோரிக்கை. எந்த வகையிலும் இதனை நியாயப்படுத்த முடியாத - ஏற்றுக்கொள்ள முடியாத - ஆக்கிரமிப்பு நடவடிக்கை - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவை விரைவில் ஆரம்பம்!

சென்னை, மார்ச் 24

**இராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே மீண்டும் கப்பல் போக்குவரத்தை முன்னெடுப்பதற்கான பணிகள் ஆரம்பமாகியுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.**

1965ஆம் ஆண்டு இராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது. எனினும் இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக இந்தக் கப்பல் சேவை 1981ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் கடந்த 2023 ஆம் ஆண்டு மீண்டும் தமிழகத்தின் நாகபட்டினம் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்கான கப்பல் போக்குவரத்து ஆரம்பமானது.

இந்தக் கப்பல் சேவையை இந்திய பிரதமர் நரேந்திர மோடி மெய்நிகர் வழியாக ஆரம்பித்து வைத்தார். இதன்போது, "இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு கப்பல் சேவை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், தற்போது இராமேஸ்வரத்தில் நகர்வு மேடை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தமிழ்நாடு செய்திகள் தெரிவித்தன. (ஐ)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று போராட்டம்!



யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தினர் கவனவீர்ப்பு போராட்டத்தை நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுத்தனர்.

நல்லூரில் உள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் முன்பாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"கொடுப்பனவை கொடுப்போம் என சொல்வது கொலையை மறைக்கவே", "சர்வதேச நீதி கிடைக்குமா" உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பி போராட்டக்காரர்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். (ஐ)

# 323 கொள்கலன்கள் விடுவிப்பு: விசாரணை குழுவிடமிருந்து எந்த அறிக்கையும் இல்லை!

கொழும்பு, மார்ச் 24

இறக்குமதியான 323 கொள்கலன்கள் சுங்க ஆய்வு இல்லாமல் விடுவிக்கப்பட்டமை குறித்து விசாரிக்க நிதி அமைச்சு குழு ஒன்றை அமைத்து 6 வாரங்கள் கடந்த போதிலும் அந்தக் குழு இதுவரை அறிக்கை எதனையும் சமர்ப்பிக்க வில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, இந்த விசாரணை அரைவாசிக் கட்டத்தைக்கூட தாண்டவில்லை என்று சுங்க தரப்புகள் தெரிவித்துள்ளன.

இந்த விவகாரத்தை சுற்றியுள்ள சர்ச்சையின் அளவை கருத்தில் கொண்டு குழு முழுமையான விசாரணையை நடத்த வேண்டியுள்ளது. எனவே, விசாரணையை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டதாக கூறப்படுவது நியாயமற்றது என்று சுங்க தரப்புகள் தெரிவித்துள்ளன.

323 கொள்கலன்களின் விடுவிப்பை விசாரிப்பதுடன் மட்டுமல்லாமல், கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன்களை அகற்றுவதில் தொடர்ந்து ஏற்பட்ட தாமதங்களை விசாரிக்கவும் இந்தக் குழு பணிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது. (ஐ)

## பண மோசடி தொடர்பில் மக்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, மார்ச் 24

பொது சுகாதார பரிசோதகர்கள் என்று கூறி சில நபர்கள் பண மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவும். இது போன்ற மோசடி செய்பவர்களிடம் சிக்காமல் உங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.


இதேநேரம், பண்டிகை காலத்துக்கான சந்தை சோதனைகள் இன்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாதாள கும்பலுடன் தொடர்புடையவரின் வீட்டிலிருந்து தோட்டாக்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் கைப்பற்றல்!

மாத்தறை, மார்ச்.24

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த போதைப் பொருள் கடத்தல் காரர் ஒருவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்த சந்தேக நபர் ஒருவரின் வீட்டிலிருந்து தோட்டாக்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கடந்த வெள்ளிக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மாத்தறை மாவட்டம் வெலிகம, கொக்மாதுவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.



சோதனை நடவடிக்கையின் போது சந்தேக நபரான வீட்டின் உரிமையாளர் வீட்டில் இருக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டிலிருந்து தோட்டாக்கள், வாள் ஒன்று, மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடுகள் 4 மற்றும் இராணுவத் துப்பாக்கி பயிற்சி புத்தகம் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படை யினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## தேர்தல் கால பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்!

### பொலிஸ் பேச்சாளர்



கொழும்பு, மார்ச் 24

எதிர்வரும் மே 6ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ளது. இதையொட்டி, பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல் காலத்தில் முன்னெடுக்கப் படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு,

பொலிஸாரின் தேர்தல் பிரிவு தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் நாடு தழுவிய வன்முறை நடவடிக்கைகள் குறித்த அறிக்கைகளை தீவிரமாகக் கண்காணித்து வருகிறது. அனைத்து சம்பவங்களும் பதிவு செய்யப்படுகின்றன. எந்தவொரு மீறல்களுக்கும் எதிராக நாங்கள் உடனடி நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டபோது சிறப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டன. தற்போது, வழக்கமான பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன, தேர்தல் நாள் நெருங்கும்போது அசம்பாவிதங்கள் ஏற்படும் பகுதிகளில் கூடுதல் பாதுகாப்புக்காக பொலிஸ் குழுக்களை கடமையில் ஈடுபடுத்தத் தீர்மானித்துள்ளோம்.

கொழும்பில் வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதை மேற்பார்வையிடுவது உட்பட, தேர்தல் நடவடிக்கை களைப் பாதுகாக்கும் பணியை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றார்கள் - என்றார். (ஐ)

## கணவனால் மனைவி வெட்டிப் படுகொலை!

கொழும்பு, மார்ச் 24

தனது மனைவியை வெட்டிப் படுகொலை செய்துவிட்டு கணவன் தலைமறைவாகியுள்ளார்.

மாத்தளை - இரத்தோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இருவரும் மாத்தளை மருத்துவமனையில் பணியாற்றுபவர்கள் என்று தெரிய வருகிறது. இருவருக்கும் 11, 13 வயதுகளில் இரு பிள்ளைகள் உள்ளனர் என்று அறிய வருகிறது. தலைமறைவான சந்தேகநபரை பொலிஸார் தேடிவருகின்றனர். (ஐ)

## இலங்கையில் முதலாவது விந்தணு வங்கி நிறுவப்பட்டது!

கொழும்பு, மார்ச் 24

இலங்கையில் விந்தணு வங்கி ஒன்று முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள காசல் மகப்பேற்று மருத்துவமனையிலேயே இந்த விந்தணு வங்கி நிறுவப்பட்டுள்ளதாக அதன் இயக்குநர் மருத்துவர் அஜித் தண்டநாராயணா தெரிவித்தார்.

இந்த விந்தணு வங்கி மூலம், குழந்தைப் பேறு இல்லாத பெண்கள் குழந்தைகளை பெறுவதற்குத் தேவையான விந்தணுவைப் பெற முடியும். இதனை மிகவும் இரகசியமாகவும் தனியுரிமையை பாதுகாக்கும் வகையிலும் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விந்தணுவை யார் பெற்றார்கள், யார் கொடுத்தார்கள் என்பதை யாரும் அறிய வாய்ப்பில்லை - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## 27 துப்பாக்கி சூடுகள் 22 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 24

இந்த ஆண்டில் இதுவரை 27 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் 22 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மன்னார், கொழும்பு, மாத்தறை, கம்பஹா, களுத்துறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலேயே இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 24.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு நிறுவனத்தின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org